Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...

பிரபாகரன்.... - பக். 07
டிரம்பின் மனைவியின்...... - பக். 16
ரியோவில் அகதிகள் அணி... - பக். 19

விலை : ரூபா 20.00

செய்தி - 45 | ஒகஸ்ட் 06-12, 2016 | பக்கம் - 20

# அவுஸ்திரேலியா என்ற நரகத்தில் இலங்கைத் தமிழர் சாகடிக்கப்படுகின்றனர்



(கொழும்பு)

இதுவரையில் அவுஸ்திரேலியாவிற்கு தஞ்சம் கோரி மொத்தமாக 1200 ஆண்கள், பெண்கள், குழந்தைகள் சென்றிருந்தார்கள்.

அவர்கள் அரசியல் தஞ்சம் கோரி வள்ளங்களில் சென்றார்கள். அவர்களை நடுக்கடலில் வைத்து தடுத்து நிறுத்தி நவுறு என்ற சிறிய தீவுக்கு அனுப்பி வைத்துள்ளார்கள். அங்கு சென்றவர்கள் பலவிதமான இன்னல்களுக்கும் இடர்களுக்கும் ஆளாக்கி வருகிறார்கள் என்று அண்மையில் கசிந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

02 இல்

## பிள்ளையார் நலன்புரிநிலைய காணியை கொள்வனவு செய்ய வசிப்பவர்கள் விருப்பம்



(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடையில் உள்ள பிள்ளையார் நலன்புரி நிலையத்தில் வாழும் 22 குடும்பங்கள் தாங்கள் கடந்த 26 வருடமாக வாழ்ந்து வரும் அந்த நலன்புரி நிலையம் அமைந்துள்ள காணியை தங்களுடைய சொந்தப் பணத்தில் கொள்வனவு செய்து வீடு கட்டி வாழ விரும்பம் தெரிவித்துள்ளனர். யாழ் மாவட்டத்தில் மொத்தமாக 32 இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் உள்ளன.

02 இல்

## திருக்கேதீஸ்வர கிணற்றில் அகழ்வுப்பணி



(மன்னார்)

திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழிக்கருகில் உள்ள கிணற்றின் அகழ்வுப் பணிகள் நான்காவது நாளாகிய வியாழக்கிழமையுடன் முடிவுக்கு வந்துள்ளதாக மன்னார் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ராஜபக்ச தெரிவித்திருக்கின்றார்.

02 இல்






## ஸ்ரீலங்கா தொழில்நுட்ப வணிகத்தில் ஈடுபட வேண்டும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சர்வதேச திறமைசாலிகளை இணைத்து உலக தொழில்நுட்ப வணிகத்தில் ஈடுபடுமாறு கூகுளின் தென்கிழக்காசியா மற்றும் இந்தியாவின் உப தலைவரான இலங்கையைச் சேர்ந்த ரஞ்சன் ஆனந்தன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

02 இல்

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## Nallur Kanthan On House Arrest

நல்லூர் கந்தன் தொடர்ந்தும் 282 வருடங்களாக வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். எமது தமிழ் கடவுள் தொடர்ந்தும் வீட்டு காவலில் வைக்கப்பட்டு இருப்பதால்தான் யாழ்ப்பாணத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு விடிவு எதுவும் இதுவரை ஏற்படவில்லை. கந்தனை எப்போது வடுடிவிக்கப்படுகின்றதோ அப்போது தான் தமிழ் மக்களுக்கு விடிவு ஏற்படும்.

ஆரம்பகாலத்தில் நல்லூர்க் கந்தன் ஆலயம் யாழ்ப்பாண மன்னர்களால் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இந்த ஆலயம் எந்த விதமான கட்டுப்பாடுகள் எதுவும் இன்றி அன்று இருந்தது. நல்லூர்க் கந்தன் எம் மக்களுக்கு அருள் பாலித்து வந்தார்.

1621 ஆம் ஆண்டு சங்கிலி குமாரன் போர்த்துக்கேயரிடம் தோற்றுப் போனான். அதையடுத்து யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் வந்தது.

போர்த்துக்கேய தளபதி நல்லூர் கந்தசாமி கோயிலை உடைத்து தரைமட்டமாக்கி அந்த கோயிலின் கற்களை வைத்து கோட்டை, கொத்தளங்களை நிர்மாணித்தான். மேலும் பிரமாண்டமான தேவாலயத்தையும் கிறிஸ்தவருக்காக நிர்மாணித்தான்.

போர்த்துக்கேயரை அடுத்து ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் போது இந்து சமயத்தின் மீதான கெடுபிடிகள் ஓரளவு குறைந்த போது 1734 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து நல்லூர்க் கந்தன் ஆலயத்தை குருக்கள் வளவு என்ற காணியில் அமைக்க முன்வந்தார்கள்.

இந்தக் குருக்கள் வளவு இஸ்லாமிய மக்களுக்கு சொந்தமாக இருந்தது. அவர்களை விரட்டி விட்டு இந்தக் கோயிலை நிர்மாணித்தார்கள்.

யாழ்ப்பாண மக்கள் இந்த கோயிலின் முதல் நிர்வாகியாக ரகுநாத மாப்பாண முதலியாரை நியமித்தார்கள்.

இவ்வாறு முதல் முதலாக நியமிக்கப்பட்ட ரகுநாத மாப்பாண முதலியார் அடுத்து அவரது குடும்பத்தினர் தொடர்ந்தும் தாங்கள் தான் இந்த கோயிலின் நிர்வாகம் எனத் தங்களை தாங்களே பிரகடனப்படுத்திக் கொண்டு கோயிலை நிர்வகித்து வருகிறார்கள்.

இன்றுள்ள குமாரதாஸ் மாப்பாண முதலியார் சென்ற 15.12.1964 ஆம் ஆண்டு தொடக்கம், இந்த கோயிலை நிர்வகித்து வருகிறார். இவரை நானோ நீங்களோ நியமிக்கவில்லை அவர்கள் தாங்களாகவே நிர்வாகித்து வருகிறார்கள். இவரை அடுத்து இவரின் மகன் அதற்குப் பின் அவரின் மகன் என தங்களை தாங்களே நிர்வாகி என பிரகடனப்படுத்தி நிர்வகித்து வருவார்கள். இது தான் இந்த கோயிலின் நிர்வாகம்.

இந்த மாப்பாண முதலியார் குடும்பத்தினர் 282 வருட காலமாக நல்லூர்க் கந்தனை வீட்டுக் காவலில் வைத்துள்ளனர்.

கந்தன் என்ற பெயரில் கோயிலில் சேரும் கோடிக்கணக்கான பணத்தை இதுவரையும் மாப்பாண முதலியார் குடும்பத்தைச் சேர்ந்த எவரும் கணக்குக் காட்டவில்லை ஏன் இந்த ஒழிவு மறைவு? பலமுறை இந்த கோயிலின் வரவு செலவுகளை காட்டுமாறு தினச்செய்தி கேட்டுவிட்டது. மாப்பாண முதலியார் அசைந்து கொடுக்கவில்லை கணக்கைக் காட்டினால் அகப்பட்டுவிடுவார் என்ற அச்சம் தான் தலைதூக்கி நிற்கின்றது என கருதுகிறோம்.

இந்தக் கோயில் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்குமாறு யாழ் மாவட்ட அதிபர் திரு. வேதநாயகத்திடம் எழுத்து மூலம் கூறியிருந்தோம். அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை அவரும் இந்த மாப்பாண முதலியாரின் வலையில் விழுந்து கடமைகளை செய்யாமல் வாய்மூடி மௌனியாக இருக்கிறார்.

ஓர் அரசாங்க உத்தியோகத்தவர் சட்டப்படி நடக்க வேண்டிய பொறுப்பு உண்டு. ஏன் இது வரை தினச்செய்தியின் வேண்டுகோளுக்கு பதில் தரவில்லை. அவரது மௌனம் பலவிதமான கேள்விக் கணைகளை எழுப்புகின்றது.

எனவே நல்லூர்க் கந்தனை வீட்டுக் காவலில் இருந்து விடுதலை செய்ய வேண்டும். தமிழர்களுக்கு விடிவு வர வேண்டும். முதலில் நல்லூர்க் கந்தனை மாப்பாண முதலியாரின் பிடியில் இருந்து விடுதலை செய்ய வேண்டும்.

தமிழ் மக்கள் எல்லோரும் ஒன்று திரண்டு நல்லூர் கந்தனை வீட்டுக்காவலில் இருந்து விடுதலை செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## அவுஸ்திரே ...

நவுறு என்பது பசுபிக் சமுத்திரத்தின் அவுஸ்திரேலியாவுக்கு அருகில் உள்ள ஒரு சிறிய தீவு கிட்டதட்ட 21 கிலோமீற்றர் சுற்றளவு கொண்டது. அதாவது 8 மைல் சுற்றளவு. இது ஸ்ரீலங்காவில் உள்ள கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் பார்க்க ஒரு சிறிய தீவாகும்.

இந்த தீவில் கடந்த 40 வருடமாக "பொஸ்பேற்" (Phosphste) அகழ்வு செய்து வந்தபடியால் அங்கே அதிகம் பேர் குடியேறவும் முடியவில்லை. பயிர்களும் விளைவிக்க முடியவில்லை.

நவுறுவைச் சேர்ந்த மொத்தமாக 10,000 ஊரை சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள். அவுஸ்திரேலியா அரசாங்கம் இந்த நவுறு தீவு அரசாங்கத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்து சென்ற செப் ரெம்பர் 2012 ஆம் ஆண்டு தொடக்கம் வள்ளங்களில் அவுஸ்திரேலியாவை நோக்கி வரும் அகதிகளை நவுறுவில் உள்ள அகதி முகாம்களுக்கு அனுப்பி வைத்து அங்கே தங்க வைக்கிறார்கள்.

இந்த அகதி முகாம்களை பரா மரிப்பதற்கு என்று அவுஸ்திரேலியா அரசாங்கம் பெரும் தொகையான பணம் நவுறு அரசாங்கத்திற்கு வழங்கியுள்ளது. சென்ற 30 ஏப்ரல் 2015 மாத்திரம் நவுறுவுக்கு அவுஸ்திரேலியா டொலர் 415 மில்லியன் (அமெரிக்க டொலர் 314 மில்லியன்) வழங்கி உள்ளார்கள்.

இவ்வாறு நவுறுவுக்கு அனுப்பி வைக்கப்படுபவர்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ள பிராந்திய செயலாக்க மையத்தில் (Regional Processing Center) ஒரு வருடத்திற்கு மேலாக தங்க வைத்து வந்து அகதிகளின் விபரங்களை ஆராய்வதற்கு செலவழிக்கிறார்கள். சிலரின் விபரங்கள் 3 வருடங்களாகியும் இன்னும் அந்த பிராந்திய செயலகத்தில் உள்ளவர்கள் தயாரித்து முடியவில்லை என்று கூறுகிறார்கள்.

அவ்வாறு விபரங்களை ஆராய்கின்ற பொழுது, இலங்கை தமிழர்களும் அவர்கள் கூடார வீடுகள் தங்கியுள்ளார்கள்.

சர்வதேச மன்னிப்புச் சபை வீட்டினுள் உள்ள வெப்ப நிலை 45 முதல் 50 டிகிரி செல்சியஸ் (113 -122 டிகிரி பரனைட்) உஷ்ணம் கொண்டதாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்கள். மேலும் இந்த ரென்டுகள் மறியல் சாலை போல தான் அமைக்கப்பட்டுள்ளது. எந்த நேரமும் காவலாளர்கள் போய் அதனுள் இருப்பவர்களை பரிசோதிப்பார்கள். தையல் ஊசி போன்றவை மற்றும் உணவுப் பொருட்கள் வைத்திருந்தால் காவலர்கள் பறிமுதல் செய்வார்கள். சோதனை செய்யும் காவலர்களின் அட்டகாசம் தாங்க முடியவில்லை எனத் தெரியவருகிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பிள்ளையார் ...

அங்கே 1318 குடும்பங்களை சேர்ந்த 4737 பேர் வாழ்ந்து வருகிறார்கள்.

மைத்திரி ரணில் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருடங்கள் ஆகியும் நலன்புரி நிலையங்களில் வாழும் சகலரையும் சொந்த நிலங்களுக்கு அனுப்பி எந்த ஒரு நலன்புரி நிலையத்தையும் இதுவரை மூடவில்லை.

பிள்ளையார் நலன்புரி நிலையத்தில் மொத்தமாக 41 இடம் பெயர்ந்த குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். இந்த நலன்புரி நிலையம் 50 பரப்பு காணிக்குள் அமைந்துள்ளது.

ஏற்கனவே இந்த நலன்புரி நிலையத்தில் உள்ள ஏழு, எட்டு குடும்பங்கள் காணிகள் பெற்று வேறு இடங்களுக்கு குடியேற உள்ளார்கள். மிகுதியாக இருக்கும் குடும்பங்களில் 22 குடும்பங்கள் இந்த நலன்புரி நிலையத்தில் 26 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து விட்டோம் என்றும் வீடுகட்டி வாழ விரும்புகிறோம் என்றும் நேற்று முன்தினம் யாழ் மாவட்ட பாதுகாப்பு கட்டளைத் தளபதி மகேக்ஷ் சேனநாயக்காவிடம் கூறியுள்ளார்கள்.

அவர்கள் ஒரு பரப்பு ரூபா 2 லட்சம் வீதம் கொடுத்து கொள்வனவு செய்ய விரும்புவதாகவும் இக் காணி உரிமையாளரிடம் பேசி இந்த காணியை தங்களுக்கு வாங்கி தருமாறு பலாலியில் உள்ள யாழ் கட்டளைத் தளபதியிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இது சம்பந்தமாக ஏற்கனவே சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச் சின் செயலாளர் வே. சிவஞானசோதியிடமும் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

அவர்களை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்க அரசு தாமதம் செய்து வருவதால் தமது சொந்த முயற்சியில் இந்த காணியை கொள்வனவு செய்து வாழ விரும்புவதாக கூறுகிறார்கள்.

அகதிகள் போல் வாழ்ந்து பட்ட அவமானங்களை இதுரை பொறுத்து விட்டார்கள். இனிமேல் அவர்கள் ஏனைய மக்கள் போல் தன்மானத்துடனும் சுதந்திரமாகவும் கௌரவத்துடனும் வாழ விரும்புவதாகவும் அதற்கு உதவி செய்து தருமாறும் யாழ் மாவட்டக் கட்டளை தளபதி மகேஷ் சேனநாயக்காவிடம் பிள்ளையார் நலன்புரி நிலைய தலைவர் எஸ். சிவஞானம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் திரு. எஸ். சிவஞானம் தலைமையில் அந்த நலன்புரி நிலையத்தில் வாழும் 8 குடும்பத் தலைவிகள் பலாலியில் அமைந்துள்ள யாழ் மாவட்டக் கட்டளைத் தளபதியிடம் தூதுக்குழக்களுடன் சென்று இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்கள்.

இவர்களின் கருத்துகளை கேட்டறிந்த கட்டளை தளபதி இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை தனக்கு கையளிக்குமாறு கேட்டுக் கொண்டதோடு, தன்னால் இயன்ற உதவிகளை செய்து தருவதாகவும் வாக்களித்தார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஸ்ரீலங்கா...

ஸ்ரீலங்கா வர்த்தக சபை நடத்திய பொருளாதார உச்சி மாநாட்டில் பேசுகின்ற பொழுது, அடுத்த சந்ததியினர் தொழில் நுட்பம், கணினி, வர்த்தகங்களில் ஈடுபடுவதற்கு சந்தர்ப்பங்களை உருவாக்கும் என்றும் சர்வதேச திறமைசாலிகளையும் அரவணைத்து அதற்கான சூழ் நிலையை உருவாக்கி இந்த வர்த்தகத்தில் முன்னேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ரஞ்சன் ஆனந்தன் அவரது 17 ஆவது வயதிலே ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறி உயர் கல்வியை அமெரிக்காவில் உள்ள மசாஸ்ரூசேட் என்ற தொழில் நுட்ப நிலையத்தில் கல்வி கற்று முதுமாணி பட்டம் பெற்றார்.

(தொடர்ச்சி...03 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## திருக்கேதீஸ் ...

கடந்த திங்கட்கிழமை இந்த அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சுமார் பதினைந்து அடி ஆழம் வரையில் அகழப்பட்ட இந்தக் கிணற்றில் இருந்து சில எலும்புகள், பல் ஒன்றும் நாணயம் ஒன்றும் உட்பட பல தடயப் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இந்தத்தடயப்பொருட்கள் இரசாயன பகுப்பாய்வு செய்யப்பட்டு, அது தொடர்பில் மன்னார் நீதி மன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து நீதிமன்றம் முடிவு செய்யுமென்றார் டாக்டர் ராஜபக்ஷ.

2014 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரம் பகுதியில் வீதி திருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்ட பொழுது சில மனித எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து அப்பகுதியில் மனிதப் புதைகுழி இருகுமென்ற சந்தேகத்தில் ஆய்வு வேலைகள் முடுக்கி விடப்பட்டன.

மேற்கொள்ளப்பட்ட ஆய்வுப் பணியின் போது சுமார் 80 மனித எலும்புக்கூடுகளும் எலும்புகளும் கண்டெடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, அந்த மனிதப் புதைகுழிக் கருகில் மூடப்பட்டிருந்த கிணற்றின் உள்ளேயும் மனித எலும்புக் கூடுகள் இருக்கலாமென காணாமல் போனோருடைய உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டிருந்தனர். அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்ற மன்னார் நீதிமன்றம் இந்தக் கிணற்றில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்கு உத்தர விட்டிருந்ததையடுத்தே இந்த அகழ்வுப் பணிகள் கடந்த நான்கு நாட்களாக மேற்கொள்ளப்பட்டன.

மேலும் காவல்துறையினருடைய பாதுகாப்பில் இருந்த இந்தக் கிணற்றை பொறுப்பெடுத்து, அதனைச் சுத்தப்படுத்தி பொதுமக்களின் பாவனைக்கு விடுமாறு மன்னார் மாவட்ட நீதவான் மன்னார் பிரதேச சபையினருக்கு உத்தர விட்டு இந்த வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளார்.

# தமிழ் அரசியல் கைதிகள் எட்டாம் திகதி

## ஒரு நாள் அடையாள உணவுத் தவிர்ப்புப் போராட்டம்

(கொழும்பு)

நாடெங்கிலும் உள்ள சிறைச்சாலைகளில் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியலக் கைதிகள், எதிர்வரும் எட்டாம் திகதி தமது விடுதலையை வலியுறுத்தி, மீண்டும் ஒருநாள் அடையாள கவனயீர்ப்பு உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர்.

அது தொடர்பில் அவர்கள் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், நல்லாட்சி அரசாங்கத்தின் காலப்பகுதியில், தமிழ் அரசியல் கைதிகளாகிய எமது நியாயமான விடுதலைய வலியுறுத்தி மூன்று சுற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஏற்கனவே ஈடுபட்டிருந்தோம்.

அதன்போது அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள், அதிகாரிகள் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்மந்தன் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் எமக்கு பல வாக்குறுதிகளையும் காலத்தவணைகளையும் வழங்கி எமது அகிம்சை அமைதிவழிப் போராட்டத்தினை இடைநிறுத்தக் கோரினார்கள்.

அவர்கள் கோரிக்கைக்கு அமைய நாம் எமது உண்ணா நோன்பினை பல முறை இடை நிறுத்தி வைத்தோம். ஆனாலும், எமது கோரிக்கைக்கு இதுவரை எதுவித செயற்பாட்டு நிலைமைகளும் ஏற்படுத்தப்படவில்லை.

மேலும் பலவிதமான அரசியல் சவாலிற்கு முகம் கொடுத்துள்ள அரசாங்கத்திற்கு மேலும் நாம் ஒரு நெருக்கடி நிலையை ஏற்படுத்த விரும்பவில்லை. அதனாலையே நாம் அடையாள கவன்யீர்ப்பு உணவுத் தவிர்ப்பினை அனுஷ்டித்து எமது விடுதலைக்கான வாக்குறுதிகளை வலியுறுத்தி நினைவூட்டுகின்றோம்.

எனவே எமது நல்லெண்ணத்தை இந்த நல்லாட்சி அரசாங்கம் புரிந்து கொள்ளும் என நம்புவதுடன், அனைத்து அரசியல்கைதிகளுக்குமான புனர்வாழ்வுப் பொறிமுறையினை மேற்கொண்டு, எமது விடுதலையை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்துகின்றோம்.

மேலும் கடந்த இரண்டாயிரத்து பன்னிரெண்டாம் ஆண்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த நிலையில், சிறைக்குள் ஏற்படுத்தப்பட்ட கலவரத்தினால் அரசியல் கைதிகளான விமலரூபன் மற்றும் டில்ரோக்ஷன் ஆகியோர் அநியாயமாக அடித்துக் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்து வரும் எட்டாம் திகதியுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியாகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## உணவகத்தில் ஒபாமாவின் மகள்

(வோஷிங்டன்)

ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் மகள் சாஷா ஒபாமா, வெள்ளை மாளிகையின் வசதிகளை துறந்து, கடலுணவு உணவகமொன்றின் சேவை முகப்பு நிலையமொன்றில் பணியாற்றுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மஷஷூஷஸ் மாநிலத்தில் உள்ள மர்தாஸ் வின்யார்ட் தீவிலுள்ள வர்த்தக நிலையமொன்றில், கோடைகால வேலையாக, 15 வயதான சாஷா உணவு பரிமாறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது முழுப் பெயரான நதாஷா எனும் பெயரைப் பயன்படுத்திய சாஷா, உணவகத்தில், ஆறு பேரைக் கொண்ட இரகசிய சேவை முகவர்களுடனேயே உணவகத்தில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோடைகால விடுமுறைகளின் மேற்கூறப்பட்ட மர்தாஸ் வின்யார்ட்டே, ஒபாமா குடும்பத்தினரின் விரும்பத்தக்க இடமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

# வாணவேடிக்கைகளுடன் கோலாகலமாகத் தொடங்கியது ரியோ ஒலிம்பிக்!

(ரியோ)


உலகின் மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழா - ரியோ ஒலிம்பிக் போட்டி மரக்காணா மைதானத்தில் இன்று அதிகாலை (06.08.2016) அமர்க்களமாகத் தொடங்கியது.

இதனையொட்டி, பிறேரஸிலின் றியோ டி ஜெனீரோ நகரம் வெள்ளிக்கிழமை தொடக்கம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

31 ஆவது ஒலிம்பிக் போட்டியான ரியோ ஒலிம்பிக், இரங்கை நேரப்படி சனிக்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு (பிரேஸில் நேரப்படி வெள்ளிக்கிழமை இரவு 8 மணி) தொடங்கியது.

தொடக்க விழா நடைபெற்ற மரக்காணா மைதானத்தில் 75 ஆயிரம் பேர் அமர்ந்து நிகழ்ச்சியை ரசித்தார்கள். 3 மணி நேரத்துக்கு மேலாக நடைபெற்ற தொடக்க விழாவில் முதல் நிகழ்ச்சியாக ஒலிம்பிக் ஜோதி ஏற்றப்பட்டது. அதைத் தொடர்ந்து ஒலிம்பிக் கொடி ஏற்றப்பட்டது.

தொடக்க விழாவில் பிரெஞ்சு சாம்பியனான குஸ்டோவ் குரேடன் தீபத்தை ஏந்தி வந்தார். இந்த தீபத்தை பிறேஸில் வீரர் வாண்டர் லீமா ஏற்றி வைத்தார்.



அதன்பிறகு ஒலிம்பிக்கில் பங்கேற்றுள்ள நாடுகளின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது.

இலங்கையைச் சேர்ந்த 7 பேர் அடங்கிய வீர வீராங்கனைகளும் கொடி அணி வகுப்பில் கலந்து கொண்டார்கள்.

ஒலிம்பிக்கின் பிறப்பிடம் கிரேக்கம் என்பதால் அந்நாட்டினர் முதல்வரிசையில் கொடியேந்திச் சென்றார்கள். அதைத் தொடர் ந்து மற்ற நாட்டினர் அணிவகுக்க, கடைசியாக போட்டியை நடத்தும் நாட்டின் வீரர், வீராங்கனைகள் அணிவகுத்துச் சென் றார்கள். இந்த அணிவகுப்பில் 10 பேர் கொண்ட அகதிகளும் அணிவகுப்பில் கலந்து கொண்டார்கள்.


வீரர்கள் உறுதிமொழி ஏற்றார்கள். தேசிய கீதம் முழங்க ஒலிம்பிக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

பிறேஸிலின் பிரபல பாப் பாடகர்களான அனிட்டா, கேட்டனோ வெலாஸ்கோ, கில்பெர்ட்டோ கில் ஆகியோர் தங்களின் இசை மற்றும் நடன நிகழ்ச்சிகளால் ரசிகர்களை மகிழ்வித்தார்கள். இதேபோல் பிறேஸிலின் கலாசாரத்தைப் பறைசாற்றும் வகையிலான கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

பிறேஸிலின் பூர்வீக குடிமக்களின் நடனம், பிறேஸில் வரலாறு போன்றவற்றை நாடக நடனம் மூலமாகக் காட்சிப்படுத்தப்பட்டது. தொடக்க விழாவில் 4800 கலைஞர்கள் பங்கேற்றார்கள்.

# வியட்நாம் வீடு சுந்தரம் காலமானார்

(சென்னை)



நடிகரும், இயக்குனருமான வியட்நாம் வீடு சுந்தரம் சென்னையில் இன்று சனிக்கிழமை அதிகாலை காலமானார். அவருக்கு வயது 76 . நாடகத்தின் மூலமாக திரைத்துறைக்கு வந்தவர்களில் சுந்தரமும் ஒருவர். இவர் எழுதிய "வியட்நாம் வீடு" நாடகம் சிறப்பாக வரவே அதை அப்படியே படமாக இயக்கினார் மாதவன். இதில் சிவாஜி ஹீரோவாக நடிக்க, பத்மினி ஹீரோயினாக நடித்தார். சுந்தரமே கதை, வசனம் எழுதினார். இப்படம் சூப்பர் ஹிட் படமாக அமைந்தது. "வியட்நாம் வீடு" தந்த புகழ் சுந்தரத்தை "வியட்நாம் வீடு சுந்தரம்" என அடையாளப்படுத்தியது.

அதைத்தொடர்ந்து, சிவாஜி கணேசன் நடிப்பில் பெரும் வெற்றிபெற்ற கௌரவம் என்ற படத்தை இயக்கினார். எம்.ஜி.ஆர்., சிவாஜி, மற்றும் முத்துராமன், ரஜினி, கமல் உள்ளிட்ட முன்னணி நடிகர்களுடன் பணியாற்றியுள்ளார். ஏராளமான டிவி தொடர்களிலும் நடித்துள்ளார். தற்சமயம் சன் டிவியில் வெளிவரும் வள்ளி நாடகத்தில் நடித்து வந்தார்.

கடந்த ஒரு வார காலமாக மஞ்சள் காமாலை நோயினால் அவதிப்பட்டு வந்தார். இடையில் வயிற்று கோலாறும் வந்தது. சனிக்கிழமை அதிகாலை திடீர் என 1 மணி அளவில் தி.நகரில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். அவருக்கு சுவேதா, அனு என்ற 2 மகள்மார் உள்ளனர்.

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஸ்ரீலங்கா...

இவர் யாழ்ப்பாண மக்களுக்கு புதியவர் அல்ல. வல்வெட்டித் துறையை சேர்ந்த நீச்சல் வீரரான ஆழிக்குமரன் ஆனந்தனின் மகனே இவர்.

ரஞ்சன் ஆனந்தன் மேலும் பேசுகையில் உலக புகழ் பெற்ற மொறட்டுவை பல் கலைக்கழகத்தில் வருடா வருடம் கணினி விஞ்ஞான படிப்புகளுக்கு 100 மாணவர்களை மாத்திரமே சேர்பது என்று ஏன் கட்டுப்படுத்த முன்வர வேண்டும்.

கிட்டத்தட்ட இந்தியாவில் தகவல் தொழில்நுட்பத்தில் 3 மில்லியன் பேரை வேலையில் இருக்கிறார்கள். இன்று தகவல் தொழில் நுட்பம் கிட்டதட்ட யு.எஸ்.டொலர் 100 பில்லியன் அளவு ஏற்றுமதி செய்கின்றது.

2025 ஆம் ஆண்டு இந்தியாவில் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி யு.எஸ். டொலர் 300 பில்லியனை தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது ஸ்ரீ லங்காவின் மொத்த வருமதியில் 4 மடங்காகும். இந்தியாவில் உள்ள ஒரு தொழில் நுட்ப கம்பனியான ரி.சி. எஸ். 3 லட்சம் பேரை பணியில் அமர்த்தியுள்ளது. ஆனால் ஸ்ரீலங்காவில் மொத்தம் தொழில் நுட்ப அமைப்புகளில் 80000 பேர் தான் பணிபுரிகிறார்கள்.

இன்று உலகத்திலேயே உள்ள 7.3 பில்லியன் சனத்தொகையில, 3.3 பில்லியன் இணைய பாவனையாளர்களாக உள்ளார்கள். இந்த இணைய பாவனை 2020 இல் 5 பில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் அவர் குறிப்பிடுகையில் "வட்ஸ் அப்" மாத்திரம் கடந்த 5 வருடத்தில் 400 மில்லியன் வாடிக்கையாளர்களை சேர்த்துள்ளது. மொத்தமாக அந்த வட்ஸ் அப்பில் 55 பேர் தான் பணிபுரிகிறார்கள்.

2014 ஆம் ஆண்டு வட்ஸ் அப்பை கூகுள் நிறுவனம் அமெரிக்கா டொலர் 19 பில்லியன் கொடுத்து வாங்கிக்கொண்டது.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: பாதயாத்திரை வெற்றி எனக் கூட்டு எதிர்க்கட்சி சொல்கிறது. பாதயாத்திரை தோல்வி என அரசாங்கம் சொல்கிறது. உண்மையில் என்ன நடக்கிறது?**

அ. சோமசுந்தரம், மன்னார்.

பதில்: வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படத் தேவை இல்லை. ஆனால், முன்னாள் ஜனாதிபதி இந்தப் பாதயாத்திரை ஒத்திகை. அடுத்த பாதயாத்திரையின் பின்னர் அரசைக் கைப்பற்றுவோம் என கூறியது அக்கறைப் படவேண்டியது.

**கேள்வி: தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் சசிகலா புஷ்பாவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?**



சி. யசோதா, திருகோணமலை.

பதில்: கேள்விக் குறிதான்.

**கேள்வி: வியாழ மாற்றம் இலங்கைக்கு சாதகமா? பாதகமா?**

மு. பொன்னுத்துரை, அரியாலை.

பதில்: இரண்டும் தான்.

**கேள்வி: பொருளாதார மத்திய நிலையப் பிரச்சினை என்னாச்சு?**

கி. ரமணன், கிளிநொச்சி.

பதில் : ஒன்றாகி இரண்டாகி மூன்றாகி விட்டது.

**கேள்வி: பாகுபலியின் சாதனையை கபாலி முறியடித்தது. கபாலியின் சாதனை பாகுபலி 2 முறியடிக்குமா?**

ரா. ராகினி, மாங்குளம்.

பதில் : பொறுத்திருந்து பார்ப்போம்.

**கேள்வி: எதிர்க்கட்சித் தலைவர்களைக் கைது செய்வதும் பிணையில் விடுவதும் நல்லிணக்க அரசின் கொள்கையா?**

வே. மாலதி, மஸ்கெலியா.

பதில் : அப்படித்தான் எண்ணத் தோன்றுகிறது.

**கேள்வி : வயதான தமிழ்க் கதாநாயகர்கள் இளம் நடிகைகளைக் கதாநாயகியாக்குவதன் நோக்கம் என்ன?**

வீ. அனந்தன், பருத்தித்துறை.

பதில்: ஆசைதான் காரணம்.

**அரசியல், சினிமா,**
**விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*
**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*


---

## ஆடி அமாவாசையில் ஆடிப்போன பிராமணன்

வ. நடராசா

இளைஞர் ஒருவர் காலஞ்சென்ற தகப்பனாருக்கு பிதிர் கடன் செய்வதற்காக ஆடி அமாவசை அன்று கீரிமலைக்கு சென்றிருந்தான்.

கடற்கரையில் அனேக பிராமணர்கள் பூசைகள் செய்வதற்கு தயாராக நிறைகுடங்களுடன் இருந்தார்கள். பிதிர் கடன் செய்யவருபவர்கள் அவர்கள் ஒருவரிடம் சென்று தங்கள் தங்கள் பிதிர் கடன்களை செய்து கொண்டிருந்தார்கள்.



சிறிது நேரம் அங்கு நடப்பவைகளை பார்த்துக்கொண்டிருந்த அந்த இளைஞன் தனக்கு பிடித்த பிராமணரிடம் போய் தனது தகப்பனாருக்கு பிதிர் கடன் செய்யும் கருமத்தில் ஈடுபட்டான்.

பிதிர் கடன் முடிந்த பிற்பாடு கடலுக்கு சென்று தலைமுழுகி விட்டு மீண்டும் அந்த பிராமண குரு முன் வந்து நின்று. அதையடுத்து அந்த பிராமணரை பார்த்து 'உங்களிடம் வருபவர்களுக்கெல்லாம் ஏதேதோ மத்திரம் உச்சாணனம் செய்து பிதிர் கடன்கள் செய்கிறீர்களே இதற்கு ஒரு நிறைகுடம் மட்டும் போதுமா?" என்று கேட்டான்.

அதை கேட்ட பிராமணர் 'இவ்வளவு பேர்களினதும் விடயங்கள் யாவும் இந்த குடத்தில் தான் அடக்கம் என்றான்" என்றார்.

அதையடுத்து அந்த இளைஞன பிராமணரிடம் வந்து தட்க்ஷணையாக ஒரு ரூபா குத்தியை கொடுத்தான்.

அந்த பிராமணன் அந்த இளைஞனை பார்த்து என்ன தம்பி எல்லோரும் ரூபா 50,100 என்று தரும் போது நீ மட்டும் ஒரு ரூபா தருகிறாயே? என்று கேட்டார்.

அதை கேட்ட அந்த இளைஞன், 'மற்றவர் தரும் பெரிய காசு எல்லாம் இந்த ஒரு ரூபாவில் அடக்கம்", என்றான்.

பிராமண குருக்கள் தலையை தொங்கப் போட்டார். அந்த பிராமணன் உசாராவதற்கு முன்பு அந்த இளைஞன் நடையை கட்டினான்.

---



## கொலம்பியாவில் கொக்கெய்ன் தயாரிப்பு நிலையங்கள் அழிப்பு

கொலம்பியாவில் சட்டவிரோதமாக இயங்கிவந்த கொக்கெய்ன் தயாரிப்பு நிலையங்கள் பொலிஸாரால் அழிக்கப்பட்டன. இந்த நிலையங்களின் மூலம் வருடாந்தம் 100 தொன் கொக்கெய்ன் தயாரிக்கப்படுவதாக அந்த நாட்டு பொலிஸார் தெரிவித்தனர்.


போதைப் பொருள் தயாரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு ஐந்து நாள் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. கொலம்பியாவின் தென்கிழக்கில் பகுதியில் உள்ள காடுகளில் பயிரிடப்பட்ட கொக்கெய்னை பொலிஸார் தீவைத்து அழித்தனர்.

இடது சாரிப் போராளிகளும் கிரிமினல் கோஷ்டிகளும் கொகச்கெய் பயிரிடுவது, அவற்றுக்கு வரி வரிவிதிப்பது உற்பத்தி செய்வது, போதைப் பொருட்களுக்கு வரி விதிப்பது மெக்சிகோவில் உள்ள கிரிமிணல்களுடன் சேர்ந்து கடத்துவது போன்ற செயல்கலைச் செய்கின்றனர்.

---

## மேசை மேல் அடங்கும் மருந்து ஆலை!

தொலைதூர யுத்த களத்தில் இருக்கும் போர்வீரர்களுக்கு காயங்கள், தொற்றுநோய்கள் ஏற்பட்டால், சிறந்த சிகிச்சை தருவது எப்படி? எதிரிகள் உயிரி ஆயுதங்களை பயன்படுத்தினால், போர்வீரர்களுக்கு உடனடி மாற்று மருந்துகள் தர என்ன செய்யலாம்?இது போன்ற கேள்விகளுடனும், கணிசமான நிதியுடனும் அமெரிக்க இராணுவம், மாசாசூடெட்ஸ் தொழில்நுட்ப நிலையத்தை அணுகியபோது, பேராசிரியர் ராஜீவ் ராம் தலைமையில் ஒரு குழு ஆராய்ச்சியில் இறங்கியது. ராமின் குழு, இதற்கு, 'பயோ பார்மகாலஜி' எனபடும் உயிரி மருந்தியல் துறையில் தான் நல்ல தீர்வு கிடைக்கும் என்று முடிவெடுத்தது. கடைசியில் அவர்கள் உருவாக்கியது தான், 'மைக்ரோ பயோ ரியாக்டர்' எனப்படும் நுண்ணுயிரி வினைக்கலன். வழக்கமாக பல நுண்ணுயிரிகளை பெரிய கலன்களில் நொதிக்க வைத்து, வளர்த்தெடுத்து, சோதித்து தான், வைரஸ்கள், பக்டீரியாக்களை கொல்லும் புதிய உயிரி மருந்துகளை உருவாக்குவர். பெரிய தொழிற்சாலை முறையை அப்படியே சுருக்கி, மேசை மேல் வைத்து ,யக்கக்கூடிய மருந்து தொழிற்சாலையையும், அதற்கு மையமாக ,யங்கும் புரத வினையூக்கி சில்லு ஒன்றையும் ராமின் குழு உருவாக்கியது. இந்த மேசை மேல் மருந்து ஆலையை போர்க்களம், தொலைதூர கிராமம், நடமாடும் மருத்துவமனைகள் போன்றவற்றில் பயன்படுத்தலாம். "புதிய கிருமிகளை எதிர்க்கும் மருந்துகள், நோயாளி இருக்குமிடத்திலேயே ஒரு மணி நேரம் முதல், மூன்று மணி நேரத்திற்குள் இந்த சாதனத்தின் மூலம் தயாரித்து நோயாளிக்கு செலுத்த முடியும்" என்கிறார் ராம். ஆய்வுக்கூட நிலையில் வெற்றி கண்டுள்ள உயிரி நுண்ணுயிர் வினைக்கலன் பரவலாக பயன்பாட்டுக்கு வர இன்னும், 10 முதல், 15 ஆண்டுகள் ஆகலாம்.



# ரியோ 2016 ஒலிம்பிக்




பிரேஸிலில் உள்ள ரியோடி ஜனறோ Rio Janerio நகரில் சென்ற 5 ஆம் திகதி ஆரம்பமான ஒலிம்பிக் விளையாட்டு திருவிழா 21 ஆம் திகதி வரை நடைபெறுகின்றது. இத்திருவிழாவில் மொத்தமாக 11239 வீர வீராங்கனைகள் பங்குபற்றுகிறார்கள்.

மொத்தமாக 306 பதக்கங்கள் - ஒவ்வொரு விளையாட்டிற்கும் தங்கம், வெள்ளி, வெண்கலம் என்று மூன்று பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

28 விதமான விளையாட்டுகள் ஆண் பெண் இருபாலருக்கும் நடைபெறவுள்ளது. ஏற்கனவே சில விளையாட்டுக்கான ஆரம்பம் 3 ஆம் திகதியே ஆரம்பித்துவிட்டது.

பிறேஸிலில் இந்த விளையாட்டு போட்டிகள் எல்லாமாக 33 இடங்களில் நடைபெறுகின்றன. இவ் விளையாட்டு போட்டிகள் 18 அரங்கங்களில் நடை பெறுகின்றன. 8 அரங்கங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டன 9 புதிய அரங்கங்கள் ஒலிம்பிக் போட்டிக்காக தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டன.

2016 ஒலிம்பிக்போட்டி, பிறேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் என முடிவான நிலையில் 2020 ஒலிம்பிக்கை எங்குநடத்துவது என்பதற்கான இறுதிச் சுற்றில், ஜப்பானின் தலை நகர் ரோக்கியோ, ஸ்பெயினின் தலை நகர் மேட்ரிட், துருக்கியின் பெரிய நகரான இஸ்தான் புல் ஆகிய மூன்று நகரங்களும் போட்டியிட்டன.






2013 இல், ஆர்ஜெண்டினா நாட்டுத் தலைநகர்போனஸ் ஏரிஸில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் கூட்டத்தில் வாக்கெடுப்பு நடந்தது. இறுதிச் சுற்றுத்தேர்வில் ரோக்கியோவை ஆதரித்து 60 பேரும், இஸ்தான்புல்லை ஆதரித்து 36 பேரும் வாக்களித்ததால் 2020 ஒலிம்பிக்போட்டியை நடத்தும் வாய்ப்பைப் பெற்றது ரோக்கியோ.


ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் புதிதாக 5 விளையாட்டுப் போட்டிகள் சேர்க்கப்பட்டுள்ளன. பேஸ்பால், சொஃப்ட்போல், கராத்தே, ஸ்கேட்போர்ட், மலையேறுதல் மற்றும் அலைச் சறுக்கு போன்ற 5 விளையாட்டுகளும் 2020 ஒலிம்பிக்கில் இடம்பெற உள்ளன. இத்தகவலை சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

ரியோ ஒலிம்பிக்கில் புதிதாக ரக்பி செவன் மற்றும் கோல்ஃப் விளையாட்டுகள் சேர்க்கப்பட்டுள்ளன. 112 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஒலிம்பிக்கில் சேர்க்கப்பட்டுள்ளது கோல்ஃப். 1924 ஆம் ஆண்டு நடைபெற்ற பரீஸ் ஒலிம்பிக் போட்டிக்குப் பிறகு இப்போதுதான் ஒலிம்பிக்கில் ரக்பி செவன் விளையாட்டு சேர்க்கப்பட்டுள்ளது.


















இம் முறை ஒலிம்பிக்கில் பங்குபற்றவுள்ள மிக முக்கியமான பிரசித்தி பெற்ற விளையாட்டு வீர வீராங்கனைகள் போட்டியிடுகின்றார்கள். அவர்களின் விபரங்கள் படத்துடன் பிரசுரிக்கப்படுகின்றன.

**உஷைன் போல்ட்** - Usain Bolt

ஜமைக்கா நாட்டைச் சேர்ந்தவர் மின்னல் ஓட்ட தடகள வீரர்.

இவர் ஏற்கனவே ஆறு தங்கப் பதக்கங்களை பெற்றுள்ளார். வரலாற்றிலே மிகவும் முக்கிய ஓட்ட வீரர். 100 மீற்றர், 200 மீற்றர், 4*100 தொடர் ஓட்டம் ஆகியவற்றில் இம்முறையும் போட்டியிடுகிறார்.

தொடர்ந்து 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3 ஆவது முறையாக ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்லும் முதல் விளையாட்டு வீராக வர வேண்டும் என்ற எண்ணத்துடன் இவர் பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

**ஜனசபே டிபாபா** - Genzebe Dibaba

இவர் எதியோப்பியா நாட்டை சேர்ந்த வீராங்கனை. இவர் 2015 ஆம் ஆண்டுக்கான சிறந்த விளையாட்டு வீராங்கனை என்று அறிவிக்கப்பட்டார்.




இரண்டு கிழமைக்குள் மூன்று போட்டிகளில் உலக சாதனையை முறியடித்துள்ளார். மேலும் இவர் 1500 மீற்றர் உள் ளரங்க போட்டி மற்றும் 800 மீற்றர் ஓட்டப்போட்டி, 2 மைல் உள்ளரங்க போட்டி ஆகியவற்றில் உலக சாதனைகள் படைத்துள்ளார். 25 வயதுடைய இவர் எதியோப்பிய நாட்டை சேர்ந்த 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வெல்ல திட்டமிட்டுள்ளார்.

**டப்னே சிக்பஸ்** - Dafne Schippers

இவர் ஹொலன்ட் நாட்டை சேர்ந்தவர். 100 மீற்றர், 200 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப் போட்டியில் தங்கம் வெல்வதற்கு முயற்சித்து வருகிறார். 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக விளையாட்டு போட்டியில் 200 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்தவர். சிறிய தூர ஓட்டங்களில் வெண்கல பதக்கங்களை வென்றுள்ளார்.

**செல்லி ஆன் பிறேசர் பிறைஸ்** -Selly Ann Fraser Pryce

இவர் 3 ஆவது முறையாக 100 மீற் றர் ஓட்டப் போட்டியில் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லமுயற்சிகள் மேற்கொண்டு வருகிறார்.


உஷைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 3 ஆவது முறை யாக ஒலிம்பிக்கில் தங்கபதக்கம் வெல்ல முன் இவர் வென்று விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முயற்சிக்காக தனது 200 மீற்றர் ஓட்டத்தை கைவிட்டுவிட்டு 100 மீற்றர் ஓட்டத்தில் கவனத்தை செலுத்தி வருகிறார்.

**ஜெசிக்கா எனிஸ் ஹில்** - Jessica ennis

2015 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற விளையாட்டுகளில் முக்கிய புள்ளி ஜெசிக்கா எனிஸ் ஹில். ஈட்டி எறியும் போட்டியில் பங்கு பற்றினார். நிறைய பயிற்சிகள் பெற்று போட்டிக்கு தயாராகி வருகிறார்.

**கஸ்டா சமானியா** - Caster semanya


இவர் தென் ஆபிரிக்காவைச் சேர்ந்தவர். இவர் 800 மீற்றர் ஓட்டத்தில் தங்கம் வெல்ல ஒலிம்பிக் போட்டியில் முயற்சித்து வருகிறார். (தொடர்ச்சி 17 இல்...)



# சொன்னார்கள் சொன்னார்கள்



மேடைகளில் கற்பனைக் கதைகளைக் கூறிக்கொண்டு வீதிவலம் வருகின்றபோதும் கடந்தஅரசாங்கம் நாட்டில் ஏற்படுத்தியிருந்த பொருளாதாரப் பிரச்சினைகளின் விளைவுகளை தற்போதுமக்கள் அனுபவிக்கவேண்டியுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனங்களை எதிர்வரும் நான்கு மாத காலத்திற்குள் பெற்றுத் தருவதாக வட மாகாண ஆளுநர் உறுதியளித்ததைத் தொடர்ந்து, உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது.




தனக்கு பெருமளவான ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் ரஞ்சன்ராமநாயக்க கூறியிருக்கும் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது என பெருந்தெருக்கள் மற்றும்உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, தெரிவித்தார்.



வெளிநாடுகளில் இருந்து மருந்து வகைகளை கொள்வனவு செய்வதற்காக சுகாதார அமைச்சு வருடாந்தம் 58 மில்லியன் ரூபா செலவிடுவதாக குறிப் பிட்ட அவர் உள்நாட்டு உற்பத் தியை அதிகரிப்பதினூடாக அந்நிய செலா வணியை சேமிக்க முடியும் எனத் தெரி வித்த சுகா தார போசாக்கு அமைச்சர் ராஜித சேனாரத்ன எதிர்வரும் காலத்தில் இலங்கைக்கு தேவையான மருந்து களில் 75 வீதத்தை உள்நாட்டிலே உற்பத்தி செய்ய எதிர்பார்ப்பதா கவும் தெரிவித்தார்.



தகவல் அறியும் உரிமைச் சட்டமூலத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரிய கையெழுத்திட்டுள்ளதாக, பாராளுமன்ற விவகார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.



இந்துக்கள் புனிதமாகக் கருதும் யாழ்ப்பாணம் கீரிமலையில் மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி சினத்தை ஏற்படுத்தியுள்ளதாக வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

# கற்கும் திறனை அதிகரிக்கும் 'பட்டை!'



எதையும் சீக்கிரம் கற்றுக்கொள்ளும், 'கற்பூர புத்தி' திறன் சிலருக்கு இயல்பாகவே உண்டு. சிலருக்கு சற்று தாமதமாகத்தான் எதுவும் பிடிபடும். இப்படி மந்த புத்தி உள்ளவர்களுக்கு, நம் சமையலறையில் உள்ள மசாலா அயிட்டமான இலவங்கப் பட்டை உதவக்கூடும் என்கிறது சமீபத்திய ஒரு ஆய்வு.

அமெரிக்காவிலுள்ள ரஷ்ய பல்கலைக்கழகத்தின் நரம்பியல் விஞ்ஞானியான மருத்துவர் கலிபாதா பாஹனும், அவரது குழுவினரும், ஆய்வகத்தில் எலிகள் மீது நடத்திய அந்த ஆய்வின் முடிவில், பட்டையின் மகிமை தெரியவந்துள்ளது. இலவங்கப் பட்டைக்கு கம கம வாசனை தருவது, 'சினமால்டிஹைட்" என்ற வேதிப்பொருள். இதை நம் கல்லீரல் செரிமானம் செய்து, 'சோடியம் பென்சோவேட்" என்ற வேதிப்பொருளாக மாற்றி ரத்தத்தில் கலக்கச் செய்கிறது. ரத்தத்தின் மூலம் சோடியம் பென்சோவேட் மூளைக்குச் சென்றதும், நினைவாற்றலின் உறைவிடமான, 'ஹிப்போகேம்பஸ்" பகுதியை தூண்டுகிறது. இதனால், மூளைக்குள் உள்ள செல்கள் ஒன்றோடொன்று தகவல் பரிமாறும் திறன் சுறுசுறுப்படைகிறது. ஆய்வகத்தில், மந்த அறிவுள்ள எலிகளுக்கு, சினமால்டிஹைட் கலந்த தீனியை ஒரு மாதம் கொறிக்கத் தந்தனர் விஞ்ஞானிகள். இதன் விளைவாக, விரைவில் கற்கும் எலிகளுக்கு இணையாக கற்கும் திறனை மந்த எலிகளும் பெறுவதை விஞ்ஞானிகள் உறுதி செய்துள்ளனர். கற்கும் திறன் குறைவாக உள்ள மாணவர்களுக்கு மட்டுமல்லாது, மூளைத்திறனை குலைக்கும், 'அல்சைமர்ஸ்' மற்றும், 'பார்க்கின்சன்ஸ்' போன்ற நோய்கள் உள்ளவர்களுக்கும் சினமால்டிஹைட் உதவக்கூடும் என்று மருத்துவர் பாஹனும், அவரது குழுவினரும் நம்புகின்றனர். அடுத்து, மனிதர்கள் மீதான பரிசோதனைக்கு பாஹனின் குழு தயாராகி வருவதாக, 'நியூரோஇம்யூன் பார்மகாலஜி" என்ற ஆராய்ச்சி இதழ் தெரிவித்து உள்ளது.



நோய் உண்டாக்கும் கிருமிகளை அழிக்க, 'ஆன்டிபயாடிக்' எனப்படும் கிரு மிக் கொல்லிகளை, விஞ்ஞானிகள் எப்படி உருவாக்குகின்றனர்? மண்ணில் இருந்து எடுக்கப்படும் கிருமிகளை வைத்து தான்! ஆனால், சமீபத்தில் ஜெர்மனியிலுள்ள டூபிங் கென் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உரு வாக்கியுள்ள, புதிய ஆன்டிபயாடிக் மருந்து எங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டது தெரியுமா? மனிதனின் மூக்கினுள் இருந்து தான்.

மனித நாசித் துவாரத்திற்குள் இருக்கும், 'ஸ்டாபைலோகோகஸ் லுக்டுனென்சில்' என்ற கரடுமுரடான பெயர் கொண்ட நல்ல நுண்ணுயிரியின் மரபணுவை வைத்து, 'லுக்டுனின்' என்ற ஆன்டிபயாடிக்கை விஞ் ஞானிகள் உருவாக்கி இருக்கின்றனர். தற்போதுள்ள ஆன்டிபயாடிக்குகளை, 'அசால்டாக' எதிர்த்து, நோய்களை ஏற் படுத்தும் சில பாக்டீரியாக்களை அழித் தொழிக்கும் திறன் லுக்டுனினுக்கு இருக் கிறது. மேலும், ஆய்வகச் சோதனைகளில், லுக்டுனின் மருந்தால் கொல்லப்பட்ட கெட்ட பாக்டீரியாக்களின் அடுத்த தலை முறைகளால், அதை எதிர்க்கும் சக் தியை பெற முடியவில்லை. இது தான்

# மூக்கு மருந்து!



மருத்துவ உலகை உற்சாகம் கொள்ள வைத்திருக்கிறது. கடந்த, 1930களில், 100க் கும் மேற்பட்ட ஆன்டிபயாடிக் மருந்துகள் வந்துவிட்டன.

மனித மூக்கிலேயே ஒரு வலுவான ஆன்டிபயாடிக் என்ற செய்தி, நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. இப்போதைக்கு லுக்டு னின் மருந்தை, ஆய்வுக்கூட எலிகள் மீது தான் விஞ்ஞானிகள் சோதித்திருக்கின்றனர். எலிகளுக்கு உண்டான புண்களை, தோலின் அடி ஆழம் வரை லுக்டுனின் ஊடு ருவிச் சென்று, சீக்கிரம் குணப்படுத்தி இருக் கிறது. இதேபோல மனித உடலிலும் அது குணப்படுத்தினால், லுக்டுனின், 21ம் நூ ற்றாண்டின், 'ஆன்டிபயாடிக் ஹீரோ'வாக கொண்டாடப்படலாம்.

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

# பிரபாகரன் - ஸ்ரீ சபாரட்ணம் தாஸ்

அரசகேசரி

யூன் 18 ஆம் திகதி 1985 ஆம் ஆண்டில் யுத்த நிறுத்தம் அறிவிப்புக்கு பின்னரும் கூட ஸ்ரீ லங்காவில் ஆங்காங்கே, அடிக்கடி குண்டு வெடிப்புக்களும், துப்பாக்கிச் சூடுகளும் நடந்து கொண்டே இருந்தன.

இருந்த போதிலும் செப்ரெம்பர் 18 ஆம் திகதி மூன்று மாத கால யுத்த நிறுத்தத்திற்கு பின்னர் இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக யுத்த நிறுத்தம் மீண்டும் நீடிக்கப்படுகிறது என்று அறிவித்தது.

அதே நேரத்தில் ஸ்ரீ லங்கா அரசாங்கம் நாடாளுமன்றத்தில் 18 வயதுக்கு மேற்பட்டோர் அடங்கிய ஒரு பிரத்தியேக படை (reserve) அணி ஒன்றை உருவாக்குவது என்று சட்டம் கொன்டு வந்தது அது மாத்திரமல்லாமல் யுத்த நிறுத்தத்தை மேற்பார்வை செய்வதற்கு 9 பேர் அடங்கிய குழுவை நியமித்தது.

அந்தக் குழுவில் 6 சிங்களவரும், 3 தமிழரும் அடங்கினார்கள். ஆனால் இந்த நடவடிக்கைகளை ஈழ தேசிய விடுதலை முன்னணி வரவேற்கவில்லை. இது சம்பந்தமாக தங்களுடைய முறைப்பாட்டை கருணாநிதிக்குத் தெரிவித்தார்கள். கருணாநிதி "இது ஒரு பெரிய ஏமாத்து வேலை என்று குறிப்பிட்டார்".

இவ்வாறு ஸ்ரீ லங்காவில் நடக்கும் கொலைகள், கொள்ளைகள் சம்பந்தமாக ராஜீவ் காந்தி தனது கருத்துக்களை



வெளியிட்டார்.

ராஜீவ்காந்தி தமிழ் நாட்டில் ஏற்பட்ட வெள்ள நிலவரங்களை ஆராய்வதற்கு சென்னை சென்றார். அப்பொழுது, பத்திரிகையாளர்கள் அவரிடம் கேள்வி கேட்ட போது ஈழ தேசிய விடுதலை முன்னணியினர் தங்கள் கொள்கைகள் சம்பந்தமான தனக்கு எதுவும் சமர்பிக்கவில்லை என்றும் அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்று தெரியவில்லை என்றும் கூறினார்.

மேலும் இந்தியா ஸ்ரீ லங்காவின் போக்கிற்கு ஆதரவு அழிக்கிறது என்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார்.

மேலும் அவர் கூறுகையில், "எந்த அரசாங்கமும் தன்னுடைய நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வது இயற்கை தான்" என்று கூறினார்.

அதே நேரத்தில் தமிழ் போராளிகளும், ஸ்ரீ லங்கா பாதுகாப்புப் படையினரும் யுத்த நிறுத்தத்தை மீறுவதனை அவர் வன்மையாகக் கண்டித்தார்.

நாட்டின் நடவடிக்கைகளை மறுசீர் அமைக்க மாற்று நடவடிக்கைகளை தன்னிடம் சமர்ப்பிக்குமாறு அவர் தமிழ்ப் போராளி குழுக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

அதேநேரம் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு பத்திரிகைக்கு பேட்டி கொடுக்கும் போது "தமிழ்ப் போராளிகள் கொலைகாரர்" என்று குறிப்பிட்டார்.

'தமிழர் பிரச்சினை. ஒரு இராணுவப் பிரச்சினை. இராணுவ ரீதியில் தான் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். மேலும் நாங்கள் ஒரு முடிவான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம்," என்று கூறினார்.

"அது மாத்திரமல்லாமல், இந்த மாதிரியான பேச்சு வார்த்தைகளைக் கைவிட்டு விட்டு மீண்டும் போராடி ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள்" என்று அவர் கூறினார்.

அதே நேரத்தில் பிரபாகரன் தனது ஈழக் கொள்கைகளை சிறிதளவேனும் கைவிடாமல் உறுதியாக இருந்தார்.

அன்றைய காலகட்டத்தில், பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு சக்தி வாய்ந்த அமைப்பாக இருந்தது. அந்த அமைப்பில் நூற்றுக்கணக்கான பயிற்றப்பட்ட போராளிகள் உறுப்புரிமை வகித்தார்கள்.

ஆறு மாதத்திற்கு முன்னர் 40 பேர் மாத்திரம் பிரபாகரன் அமைப்பில் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது நூறு பேருக்கு மேற்பட்டோர் அமைப்பில் சேர்ந்து சக்தி வாய்ந்த அமைப்பாக மாற்றியுள்ளார்கள்.

1985 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் பிரபாகரன் ஒரு நீண்ட அறிக்கையை வெளியிட்டார். அதில் தமிழீழத்திற்காகப் போராடும் தனது உறுதியைக் குறிப்பிட்டிருந்தார். மாற்று இயக்கப் போராட்டத்தில் உள்ளவர்கள் "துரோகிகள்" என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். இருந்த போதிலும் தன்னுடைய அறிக்கையில் இந்தியா சமாதானப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று வற்புறுத்தி வந்த போதிலும் இந்தியாவுக்கு எதிராக அவர் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் சுமத்தவில்லை.

அந்த காலகட்டத்தில் பிரபாகரனின் இயக்கத்துடன் போட்டி போடக்கூடிய நிலையில் தமிழீழ விடுதலை முன்னணி அமைப்பின் ரெலோ இருந்தது. ரெலோவுக்கு இந்திய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கி வந்தது.


தேவையான ஆயுதங்களை அவர்கள் ரெலோவுக்கு வழங்கினார்கள். இருந்த போதிலும் பிரபாகரன் வெளிச்சந்தையில் ஆயுதங்கள் வாங்கி வந்த நிலையில் ரெலோவின் நிலை பின் தள்ளப்பட்டது.

ரெலோ இயக்கம் பல தாக்குதல்களைச் செய்த போதிலும், அந்த இயக்க தலைவர் ஸ்ரீ சபாரட்ணத்தினால் பிரபாகரனின் ஆண்மையுடனும், அவருடைய கொலை வெறித்தனத்துடனும் போட்டி போட கூடியதாக இருக்கவில்லை.

ஸ்ரீ சபாரட்ணம் முன்னாள் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்த கலைஞர் கருணாநிதியுடன் நெருக்கமாக இருந்தார். அதே நேரத்தில் பிரபாகரன் தமிழ் நாட்டு முதல்வர் எம்.ஜி. இராமசந்திரனுடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்தார்.

எம்.ஜி. இராமசந்திரனுடன் நண்பனாக இருந்த பிரபாகரன் கலைஞர் கருணாநிதியின் அழைப்பை ஏற்று அவரைச் சந்திக்க மறுத்து விட்டார்.

எம்.ஜி. இராமசந்திரனைப் பொறுத்த வரையில் யாராவது கருணாநிதிக்கு கைகொடுத்தால் அவரை தூர வைக்க வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தார்.



இந்தச்சந்தர்ப்பத்தில் தமிழ் நாட்டுப் பொலிஸார் ஸ்ரீ சபாரட்ணத்துடன் நல்ல மனப்பான்மையுடன் விளங்கவில்லை. இருந்த போதிலும் சபாரட்ணம் இந்தியாவின் றோவுடன் மிகுந்த நம்பிக்கையும் தொடர்பும் வைத்திருந்தார். எந்தவிதமான கொள்கைகள், சட்டதிட்டங்கள் இல்லாமல் ரெலோ வளர்ந்து வந்தது.

அவர்கள் விடுதலை புலிகள் சிலரை ஆக்கிரமித்து ஆளவும் முன் வந்தார்கள். வடமராச்சியில் இருந்த ரெலோ அமைப்பின் தளபதி தாஸ் மிகவும் கடினமான பேர்வளி, அஞ்சா நெஞ்சன் என்று வர்ணிக்கப்பட்டார்.

அவருடைய நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளை அச்சுறுத்திக்கொண்டே இருந்தது. தாஸின் இறப்பு ரெலோவின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

ஸ்ரீ சபாரட்ணம் எந்தக் காலத்திலும் கொல்லப்படுவேன், தனது உயிருக்கு ஆபத்து இருக்கும் என்று நம்பவில்லை.

ஜனவரி 1986 ஆம் ஆண்டு ஸ்ரீ சபாரட்ணம் தமிழ் நாட்டில் இருந்து இரகசியமாக யாழ்ப்பாணத்திற்கு வந்து சேர்ந்தார்.

அவர் யாழ்ப்பாணத்திற்கு வருவதற்கு சில நாட்களுக்கு, முன்பு ரெலோவை எதிர்த்து அழிக்க பிரபாரன் திட்டமிட்டுள்ளார் என்று ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் ஸ்ரீ சபாரட்ணத்திற்கு எச்சரித்தார்.

'விடுதலைப் புலி எங்களை அழிக்க மாட்டார்கள், அவர்களுக்கு எங்கள் தேவை வேண்டும், எங்களுக்கு அவர்கள் தேவை வேண்டும் எங்கள் மத்தியில் பிரச்சினை இருக்கிறது உண்மை தான். ஆனால் அவைகளை நாங்கள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துகொள்வோம்" என்று கூறினார்.

யாழ்ப்பாணம் வந்த சபாரட்ணத்திற்கும் விடுதலைப்புலிக்கும் இடையில் சச்சரவுகள் உருவாக ஆரம்பித்தது. அந்தச் சமயம் தான் ஸ்ரீ சபாரட்ணம் ஆதரவாளரான ரெலோ யாழ் மாவட்ட தளபதி பொபியை காப்பாற்றுவதாக கூறினார். உடுப்பிட்டியைச் சேர்ந்த தாஸ் ரெலோவினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த கொலை ரொலோவுக்குள் பலத்த குழப்பத்தை ஏற்படுத்தியது.

(தொடரும் ...)



# துப்பறியும் சாம்ராஜ்யம் நடத்தும் ரஜனி

பரபரப்பான மும்பையின் மாஹேம் பகுதியில் வசிக்கும் ரஜனி பண்டிட்... இந்தியாவின் முதல் பெண் துப்பறியும் நிபுணர். நம் பக்கத்துவீட்டுப் பெண்ணைப் போன்ற முகத்தோற் றம், உடல்வாகு. ஆண்களே அதிகம் கோலோச்சும் இந்தத் துறையில், 25 வருடங்களுக்கு முன்னரே சுயமாக துணிந்து இறங்கியவர் ரஜனி. தன்னுடைய 'ரஜனி பண்டிட் டிடெக்டிவ் சேர்வீசஸ்' நிறுவனத்தின் மூலம், 30 க்கும் மேற்பட்ட பணியாளர்கள், இந்தியாவில் மட்டுமல்லாமல் சர்வதேச அளவிலான துப்பறியும் விங், 75,000 க்கும் அதிகமான வழக்குகள் என துப்பறியும் துறை யில் ஒரு சாம்ராஜ்யத்தையே நடத்திக் கொண்டிருக்கிறார்.

"என் தந்தை மஹாராஷ்டிர மாநில சி.ஐ.டி. பொலிஸில் பணிபுரிந்தார். மகா த்மா காந்தி கொலைவழக்கு விசாரணை யில் பங்கேற்றவர். வழக்குகள் சம்பந்த மாக என் தந்தையை சந்திக்க பலர் எங்கள் வீட்டுக்கு வருவார்கள். அவர் கள் பேசுவதை எல்லாம் நான் கூர்ந்து கவனிப்பேன். சில வழக்குகள் குறித்து தனிப்பட்ட முறையில் நான் என் தந்தை யிடம் விவாதிப்பது உண்டு.

கல்லூரியில் படிக்கும்போது என் வகுப்புத் தோழி ஒருத்தி, சில மாணவர் களுடன் சேர்ந்து புகைபிடிப்பது, மது அருந்துவது என தகாத பழக்க வழக்கங் களில் ஈடுபட்டாள். நல்ல குடும் பத்துப் பெண், அப்படி தீயவழியில் செல்வதை தாங்கிக்கொள்ள முடியாமல், அதை அவளுடைய தந்தையிடம் தெரிவித்த தோடு, அவரை ஒரு டாக்ஸியில் அழைத்துச் சென்று அவளது நடவடிக்கைகளை நேரடியாகக் காண்பித்தேன். அவர் தன் மகளைக் கண்டித்து நல்வழிப்படுத்தினார். "ல்ல சமயத்தில் உதவினாய். நீ இந்தப் பிரச்சினையை என்னிடம் கொண்டுவந்த சேர்த்த விதம், மிகவும் துணிச்சலானது. நீ துப்பறிவதைத் தொழிலாகச் செய்யலாமே?" என்றார் தோழியின் அப்பா. அந்த வார்த்தைகள் என் மனதில் ஊறிக்கிடந்தன.

கல்லூரிப் படிப்பை முடித்தபின், தற்காலிகமாக ஒரு நிறுவனத்தில் பணிபுரிந் தேன். அப்போது என்னுடன் பணிபுரிந்த ஒரு பெண்ணின் குடும்பத்தில் நிகழ்ந்த நகைத் திருட்டைக் கண்டறிய களமிறங்கி, உண்மையை வெட்ட வெளிச்சமாக்கினேன். அப்போதுதான், துப்பறிவதற்கென்று பயிற்சியோ, சிறப்புத் தகுதியோ, கல்வியோ தேவையில்லை. மனதை ஒருமைப்படுத்துவது, விடாமுயற்சி, சமயோசிதம், துணிச்சல், உள்ளுணர்வு, துணிகரச் செயல்களைச் செய்யும் சாகசம் மற்றும் மனோதிடம் இவையெல்லாம்தான் வேண்டும் என்பதை உணர்ந்தேன். துப்பறிவதை முழு நேரத் தொழிலாகச் செய்ய முடிவெடுத்தேன்" எனும் ரஜனி, தான் தொடங்கிய துப்பறியும் நிறுவனம் குறித்த விளம்பரத்தை, பிரபல மராட்டிய நாளிதழில் வெளியிட முயன்றிருக்கிறார்.

"நான் பெண் என்ற ஒரே காரணத்தினால், அந்த நாளிதழின் ஆசிரியர் என் விளம்பரத்தை வெளியிட முன் வரவில்லை. எதேச்சையாக, அந்த ஆசிரியரின் நண்பர் ஒருவரின் வழக்கு ஒன்றைத் துப்பறிந்து பிரச்சினையைத் தீர்த்து வைத்தேன். அதற்குப் பின் அந்த நாளிதழின் நிருபரே என்னைத் தேடிவந்து பேட்டி கண்டு, என் புகைப்படத்துடன் சிறப்புக் கட்டுரையை வெளியிட்டார். அன்றிலிருந்து இன்றுவரை, என் நிறுவனத்துக்காக விளம்பரம் கொடுக்க வேண்டிய அவசியமே எனக்கு ஏற்பட வில்லை" என்றபோது, ரஜனியின் குரலில் கம்பீரம்.

மாறுவேடத்தில் புலனாய்வது, வேலைக்கார பெண், கர்ப்பிணி, கண் பார்வையற்ற பெண் போன்ற போர்வையில் ஒருவரின் வீட்டில் தங்கி துப்பறிவது என பலப்பல அவதாரங்களில் துப்பறிந்திருக்கிறார் ரஜனி. பயம் என்ற வார்த்தைக்கு இவரது அகராதியில் இடம் இல்லை. மறக்கமுடியாத ஓர் அனுபவம் பற்றிப் பகிர்ந்தபோது,

"மஹாராஷ்டிர முன்னாள் முதல்வரின் நண்பர் ஒருவர் என்னைத் தேடி வந்தார். தன் சொந்த சகோதரர் கொலைவழக்கை விசாரிக்க வேண்டினார். நான் அவரது வீட்டில் ஆறு மாதங்கள் பணிப்பெண்ணாக வேலை செய்தேன். அவருடைய தாயைச் சந்திக்க ஒரு நபர் அடிக்கடி வருவார். ரகசியமாக ஏதோ பேசிக்கொள்வார்கள். எவ்வளவோ முயற்சித்தும் அவர்கள் பேசுவதை என்னால் டேப் செய்ய முடியவில்லை.

ஒருநாள், 'பொலிஸ் தீவிரமாகக் கண்காணிப்பதால் இனி இங்கு வராதே' என அந்த நபரிடம் கூறினார் எஜமானி. நான் சமையல் அறையில் இருந்த கத்தியை எடுத்து, என் காலில் ரத்தம் வருமாறு கீறினேன். கத்தி தவறுதலாகக் காலில் விழுந்துவிட்டது எனக் கூற, எஜமானி, 'பாண்டேஜ் போட்டுக் கொண்டு வா' எனச் சொல்லி என்னை அனுப்பி வைத்தார். உடனே நான், வெளியே வந்து என் வாடிக்கையாளருக்கு போனில் தகவலைத் தெரிவித்தேன். அவரும் பொலிஸுடன் விரைந்து வந்து அந்த நபரையும் தாயையும் கைதுசெய்தார். தொடர் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்தன" என்றவர்,

"பாலிவுட் நடிகர், நடிகைகள், சின்னத் திரை நட்சத்திரங்கள் பலர் என் வாடிக்கையாளர்கள். அவர்களது பிரச்சினைகள் எல்லாம், தங்கள் கணவன் அல்லது மனைவியின் எக்ஸ்ட்ரா மேரிட்டல் பழக்கம் பற்றியதாக இருக்கும். அது உண்மைதானா என்று கண்டறியும் பொறுப்பை என்னிடம் ஒப்படைப்பார்கள். இதனால், படப்பிடிப்புத் தளங்கள் தொடங்கி, சின்னத்திரை நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களின் அலுவலகங்கள் வரை எங்கள் பணியாளர்களை நிரந்தரமாகவே வேவுப் பணிக்கு அமர்த்தியுள்ளோம். மேலும், குடும்ப வழக்குகள், நிறுவனங்கள் சம்பந்தமான விஷயங்களை வேவுபார்ப்பது, காணாமல் போனவர்களைக் கண்டறிவது, கொலை வழக்குகளை கையாள்வது, என இந்தத் துறையின் திகிலையும் த்ரில்லையும் ரசித்து அனுபவித்து வருகிறேன்" என்று சொல்லும் ரஜனி, அது தொடர்பான தன் அனுபவங்களைத் தொகுத்து ஃபேசஸ பிஹைண்ட் ஃபேசஸ் (Faces Behind Faces), ஹமாயாஜால்' (Mayajal) என இரண்டு புத்தகங்கள் எழுதியுள்ளார். அவை நிறைய விருதுகளைப் பெற்றிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

"காவல்துறையைப்போல, எங்களுக்கென்று சிறப்புப் பாதுகாப்போ பயிற்சியோ இல்லை. ஆனால், காவல்துறை அதிகாரிகள் எங்கள் சிரமத்தைப் புரிந்துகொண்டு உதவுகிறார்கள். திருமணம் செய்துகொள்ளாமல் தனியாகவே வாழ்கிறேன். என்னைப் பொறுத்தவரை, ஒரு வழக்கை விசாரித்து உண்மையை வெளிப்படுத்தும்போது கிடைக் ம் சந்தோஷத்துக்கும் பாராட்டுகளுக்கும் ஈடு இணை எதுவும் இல்லை!"

## ஆ டை (Ao Dai)

'என்னது... ஆடையை இரண்டா பிரிச்சு 'ஆ டை'னு போட்டிருக்காங்களே..?' என்று பார்க்கிறீர்களா? அதுதான் அந்த உடைக்குப் பேரு. இது வியட்நாம் நாட்டின் பாரம்பரிய உடைகளில் ஒன்று. 'ஆ' என்றால் மேற்புறம் அணிகிற உடை, 'டை' என்றால் நீளம். நம் நாட்டு பலாஸோ சல்வார் மாதிரி இருக்கும் "ஆ டை', கால்கள் வரை நீண்டுள்ளது. வியட்நாம் நாட்டு புத்தாண்டின்போது, பெண்கள் எல்லோரும் "ஆ டை" உடுத்துவதை வழக்கமாக வைத்துள்ளார்கள். பாஜு குருங் (Baju Kurung)

மலாய் மக்களின் பாரம்பரிய ஆடையான பாஜு குருங், மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா நாட்டுப் பெண்களால் உடுத்தப்படுகிறது. மேற்புறம் கமீஸ் மற்றும் கீழே லோங் ஸ்கேர்ட்... இதுதான் பாஜு குருங்கின் வடிவமைப்பு.

19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜோஹர் மன்னர் அபு பக்கரால் பிரபலப்படுத்தப்பட்ட இந்த உடை, சில இடங்களில் இஸ்லாம் பெண்களின் திருமண உடையாகவும் இருக்கிறது.



இந்தியா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகளில் தயாரிக்கப்படும் பட்டுத் துணியில் நெய்யப்படும் ஆடை. ரம்ழான் மாதத்தில் பெண்களால் அதிகம் அணியப்படுகின்றது.

## பத்திரிகையில் பணிபுரிவதற்கு

ஓர் ஆண்டு நிறைவடைந்ததை அடுத்து வாரமலராக வெளிவந்துகொண்டிருக்கும் தினச்செய்தியில் பணிபுரிவதற்கு பல்வேறு துறைகளிலும் அனுபவமும் தேர்ச்சியும் உள்ளோர் தேவைப்படுகின்றார்கள்.

+ செய்தி ஆசிரியர்
+ உதவி ஆசிரியர்
+ பக்கவடிவமைப்பாளர்
+ கணனி விற்பன்னர்கள்
+ நிருபர்கள்
+ விளம்பரமுகவர்கள்
+ பத்திரிகை விற்பனையாளர்கள்

உங்கள் சுயவிபரக் கோவையை

thinacheithi@hotmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


தபாலில் அனுப்ப விரும்புவோர் :


**தினச்செய்தி,**
**தில்லைகட்டி வீதி,**
**சுன்னாகம்.**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக தொடர்புகளுக்கு : 071 976 4514

தினச்செய்தி நிர்வாகம்





# சிறுவர் பக்கம்

## பவழக்கால் உள்ளான்



'பவளக்கால் உள்ளான்' இது எதைக் குறிப்பிடுகிறது? இது ஒரு பறவை. இதன் கால்கள் பவள நிறத்தில் இருக்கும். ஆங்கிலத்தில் stilt. இதன் இன்னொரு பெயர் பைட் ஸ்டில்ட் (pied stilt- வண்ண பொய்க்கால்). இதன் கால்கள் நீண்டும் மெல்லியதாக இருக்கும். இரு குச்சிகளை நட்டுவைத்தது போல் தோற்றம். அதன் மீது ஒரு சிறிய உருவம். கழுத்திலிருந்து வயிறு தொடங்கி வால் வரை வெள்ளையாகவும் முகுதுப் பகுதி கறுப்பாகவும் இருக்கும். இதிலேயே இன்னொரு வகை காக்கி (kaki). இதற்கு கால்கள் சிவப்பாக இருந்தாலும் உடல் முழுவதும் கறுப்பு நிறமாக இருக்கும்.

ஆண், பெண் இரு பறவைகளும் கூடு கட்ட இடத்தை தேர்வு செய்யும். குச்சிகளை ஒன்றாக சேகரிக்கும். ஆண், பெண் இரண்டுமே அடைகாக்கும். பெண் பறவை, ஒரு தடவைக்கு ஒன்றிலிருந்து ஐந்து முட்டைவரை இடும். இருபத்தைந்து நாட்கள் அடைகாத்த பிறகு குஞ்சு பொரியும். வெளிவந்த இரண்டு மணி நேரத்திற்குள் குஞ்சுகள் கூட்டை விட்டு வெளியேறிவிடும்.

நதி, ஓடை, குளம், சதுப்பு நிலப் பகுதிகள் போன்ற இடங்களுக்கு அருகில் இவை வசிக்கும். நீரிலுள்ள மீன், மெல்லுடலிகள் மற்றும் பல்வேறு நீர்வாழ் பூச்சிகள், லார்வாக்களைச் சாப்பிட்டு வாழும்.

## வாரமொரு குறள்



*குறள் 41*

***இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்***
***நல்லாற்றின் நின்ற துணை.***

**பொருள்**

பெற்றோர், வாழ்க்கைத் துணை, குழந்தைகள் என இயற்கையாக அமைந்திடும் மூவர்க்கும் துணையாக இருப்பது இல்லறம் நடத்துவோர் கடமையாகும்.


## சின்னதாக ஒரு நாடு

உலகின் மிகச் சிறிய ஜனநாயக நாடு 'சான் மரினோ' (ளுயெ ஆயசைழெ). ஐரோப்பா கண்டத்தில் உள்ள இந்த நாடு சுற்றிலும் இத்தாலியால் சூழப்பட்டுள்ளது. ஐரோப்பாவில் உள்ள சிறிய நாடுகளான வத்திகான் (ஏயவஉையெ ஊவைல), மொனாகோ (ஆழயெஉழ) நாடுகளை விடச் சிறிய நாடு இது. சுமார் 30,000 மக்கள் தொகையைக் கொண்ட இந்த நாட்டின் மொத்தப் பரப்பளவு 62 சதுர கி.மீ. சான் மரினோ நாட்டை, நாடாளுமன்றத்தின் நிர்வாகக் குழு ஆட்சி செய்கிறது. இந்த நாட்டுக்கென, தனி ராணுவமும் இருக்கிறது. இதன் நாணயம் யூரோ. சான் மரினோ நாடு இத்தாலியின் பல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுகிறது. இங்கு இரு ஆறுகள் பாய்ந்தாலும், நீர்வழிப் போக்குவரத்து கிடையாது. மொத்தமும் சாலை வழிப் போக்குவரத்துதான். 220 கிலோ மீட்டருக்கு சாலைகளும், மலைகளுக்கு இடையே கம்பி வட ஊர்திச் சேவைகளும் உண்டு. வருடத்திற்கு 20 லட்சத்துக்கும் மேலான சுற்றுலாப் பயணிகள் சான் மரினோவிற்கு வருகின்றனர். இதனை அடிப்படையாகக்கொண்டே இந்த நாட்டின் பொருளாதாரம் இருக்கிறது.



## பாம்பு ஜோசியம் பார்க்கலையோ!

கிளி ஜோசியம் சொல்லி, பிழைப்பு நடத்துவோரை பார்த்துள்ளோம். ஆனால், உ.பி.மாநிலத்தில், வாரணாசி நகரில், பாம்புகளை வைத்து, ஜோசியம் சொல்கின்றனர். காவி உடை அணிந்து, நெற்றியில் விபூதியும், குங்குமப் பொட்டும் வைத்துள்ள சாமியார்கள் தான், இந்த பாம்பு ஜோசியர்கள். வருங்காலம் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள விரும்புவோர், சாமியார் முன் உட்கார்ந்தவுடன், சில அசைவுகளில், உஷராகி விடுகிறது பாம்பு. பின், அடுக்கி வைத்த சீட்டுகளில் ஒன்றை தொடுகிறது. உடனே, அச்சீட்டை பிரித்துப் படித்து, ஜோசியம் கூறுகிறார், சாமியார்.



## விடுகதைகள்

1. பொண்ணு குண்டுதான்... ஆனால் உடை பள...பள...பள...பள.. இவள் யார்?
2. ஆயிரம் பேர் அயராது உழைத்துக் கட்டிய மண்டபத்தை, ஒருவன் உடைத்தான்.... இது என்ன?
3. தாகம் தீர்க்காது, கிணற்றில் தங்காது, கைகளால் அள்ள முடியாது, பார்வைக்கு மட்டுமே விருந்து... இது என்ன?
4. ஓட ஓடக் குறையும் வால்...இது என்ன?
5. கருநீல உருவத்திலிருந்தாலும் சுவைக்கு மட்டும் பஞ்சமில்லை.... இது என்ன?

**விடைகள் :** 1. வெங்காயம்,2. தேன்கூடு
3. கானல் நீர், 4. ஊசி நூல்
5. நாவல் பழம்



# குறுக்கெழுத்துப் போட்டி - 14

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 14

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ☒ | 3 |
| | ☒ | | ☒ | 4 | |
| ☒ | 5 | ☒ | 6 | | ☒ |
| 7 | | | | ☒ | 8 |
| 9 | | ☒ | ☒ | 10 | ☒ |
| | ☒ | 11 | | | |

**இடமிருந்து வலம்**

1. அவுஸ்திரேலியவின் தேசிய மிருகம்.
4. பூக்களில் இருந்து கிடைப்பது.
6. அரசர்களின் ஆயுதம்.
7. வசமான மலர் (குழம்பியுள்ளது)
8. அழைக்கும் எழுத்து.
9. இது முத்திப்போச்சு என்பார்கள்.
11. கழுத்தை அலங்கரிக்கும் ஆபரணம்.

**மேலிருந்து கீழ்**

1. அம்பு
2. மிருகங்கள் வாழும் இடம்.
3. துள்ளியோடும் மிருகம்.
4. இதற்கு வாலில் விஷமுண்டு.
5. இரவிலே மலர்வது.
6. திரைப்படப் பாடலாசிரியர்.
7. ஆண் வாரிசு.
10. பேசும் பறவை.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஒகஸ்ட் 18 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 20.08.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப்போட்டி - 12 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. அணில்
3. உலை
4. பன்றி
5. புன்னகை
9. சதி
11. மங்கை
12. வடை

**மேலிருந்து கீழ்**

1. அம்பு
2. யன்னல்
3. உறி
5. பகை
7. மா
8. சங்கு
10. விதி

### சரியான விடையை எழுதியவர்கள்

1. என். கார்த்திகா, பலாலி வீதி, புன்னாலைக்கட்டுவன்.
2. ஆர். மேகலா, திருகோணமலை.
3. இ. பார்த்தசாரதி, கே.கே.எஸ். வீதி, மாவிட்டபுரம்.
4. மு. சாந்தி, உருத்திரபுரம், கிளிநொச்சி.
5. எல். மனோகரி, பளை.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ......................................

முகவரி : ......................................

......................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 14**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# ஹீரோ வில்லன் அஜித்



## கூல் ஜோடி!

த்ருஷ்யம்' படத்தின் மூலம் மலையாளம், தெலுங்கு என ஒரு ரவுண்டு அடித்த மீனா, தன் பேபி நைனிகா தெறி பேபியானதால் கனித்துக் கொள்வதற்காக எந்தப் படத்தையும் ஒப்புக்கொள்ளாமல் இருந்தார். பேபி தற்போது ஸ்கூலுக்குப் போவதால், மீண்டும் களத்தில் இறங்கிவிட்டார் மீனா. மோகன்லாலுக்கு மனைவியாக ஒரு படத்தில் நடிக்கிறார். 'வெள்ளிமூங்கா' இயக்குநர் ஜிபு ஜேக்கப் இயக்கும் படத்தில்தான் இருவரும் மீண்டும் இணைகிறார்கள்.

கடந்த 10 ஆண்டுகளில் அஜித் நடித்த படத்திலேயே அதிகம் கொண்டாடப்பட்டது 'மங்காத்தா'தான். அதில் அஜித்துடன் முக்கிய வேடத்தில் நடித்திருந்தார் அர்ஜுன். தற்போது அஜித் நடிக்கும் 'தல 57' படத்திலும் அர்ஜுனை முக்கிய வேடத்தில் நடிக்க வைக்க அணுகியிருக்கிறார் இயக்குநர் சிவா. இளம் பாலிவுட் நடிகர் ஒருவரும் படத்தில் நடிக்க இருக்கிறாராம். இன்னொரு சர்ப்ரைஸாக அஜித் ஹீரோ,



## நடிகைகளின் விவாகரத்துகள் அதிகரிப்பு

காவ்யா மாதவன்
வாரியர் மம்தா
விவாகரத்து செய்
கமல்ஹாசன் ஜே
மற்றும் மனசுக்கு
ஆனந்த ஆராதன
பவுர்ணமி உள்ளி
1980 மற்றும் 90
கதாநாயகியாக இ
போல் அவரது ச
நடிகை கல்பனாவ
ஜோதிர்மயி 004

## அஜித்துக்கு OK விக்ரமுக்கு NO

அஜித் நடிக்கவுள்ள "தல 57" படத்தின் நாயகியாக நடிக்க ஒப்பந்தமாகியுள்ள காஜல் அகர்வால், சிரஞ்சீவி நடித்து வரும் 150 ஆவது படமான "கத்தி" ரீமேக்கிலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். ஏற்கனவே ஜீவாவுடன் "கவலை வேண்டாம்", ராணாவுடன் ஒரு தெலுங்கு படம் என இரண்டு படங்களில் பிசியாக நடித்து வரும் காஜல் அகர்வால், அஜித், மற்றும் சிரஞ்சீவியுடன் என இரண்டு பெரிய பட்ஜெட் படங்களிலும் ஒப்பந்தமாகி யுள்ளதால் "விக்ரமுடன்" நடிக்கவிருந்த "கருடா" படத்தில் இருந்து விலகிவிட்டதாக கூறப்படுகிறது. விக்ரம் நடிக்கவுள்ள "கருடா" படத்தில் இன்னும் ஒப்பந்தமாகவில்லை என்றும் தற்போது நடித்து வரும் படங்களில் மட்டும் தான் முழு கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



# திலகவதியான சிந்து



சன் டி.வி 'தெய்வமகள்' சீரியலில் 'திலகவதி" கரக்டரில் தன் எதார்த்தமான நடிப்பால் அசத்திக் கொண்டிருக்கிறார், சிந்து ஷ்யாம் கணேஷ். 'நான் பிறந்தது கேரளா. கிளாஸிக்கல் டான்ஸர். டென்த் படிச்சுட்டு இருந்தப்போ, 'பூதக் கண்ணாடி' மலையாளப் படத்துல மம்முட்டியின் மகளாக நடித்தார். இன்னொரு படத்தில் மோகன் லாலின் மகளாக நடித்தார். தொடர்ந்து பி.எஸ்ஸி., மத்ஸ் படிச்சுக் கிட்டே, நிறைய சீரியல்களில் ஹீரோயினா வும், சில மலை யாளப் படங்களிலும், நிறைய விளம்பரப் படங்களிலும் நடித்தார். நானும், தமிழ் நடிகரான ஷ்யாம் கணேஷும் ஒரு விளம்பரப் படத்துல் நடித்த போது காதலித்து. தமிழ் நாட்டு மருமகளானார். 'ஆய்த எழுத்து' உள்ளிட்ட சில படங்க்ளி லும், விஜய் ரி.வி. ஸ்ரீராமன் ஸ்ரீதேவி', சன் ரி.வி. 'ஆனந்தம்' என்று நிறைய சீரியல்களில் நடித்தார். இப்போ 'தெய்வ மகள்', விஜய் டி.வி. 'பகல் நிலவு' சீரியல் கலெக்டர் 'ரேவதி' 'போகன்' படத்தில் ஜெயம் ரவியோட அக்கா, கௌதம் கார்த்திக் நடிக்கிற 'ரங்கோன்' படம் என்பன கைவசம் உள்ளன.

காவ்யா மாதவன், மஞ்சு வாரியர் மம்தா மோகன்தாஸ் விவாகரத்து செய்து கொண்டார். கமல்ஹாசன் ஜோடியாக 'விக்ரம்' மற்றும் மனசுக்கும் மத்தாப்பு, ஆனந்த ஆராதனை, பகலில் பவுர்ணமி உள்ளிட்ட படங்களில் நடித்த 1980 மற்றும் 90-களில் முன்னணி கதாநாயகியாக இருந்த ஊர்வசி. இது போல் அவரது சகோதரியான மறைந்த நடிகை கல்பனாவும் விவாகரத்து செய்தார். ஜோதிர்மயி 004 இல் நிஷாந்த் குமார்



என்பவரை திருமணம் செய்து 8 வருடங்கள் சேர்ந்து வாழ்ந்து விட்டு 2011 இல் அவரை விவாகரத்து செய்து விட்டார். நடிகைகள் கலாரஞ்சனி, லெனா ஆகியோரும் விவாகரத்து செய்துள்ளனர். இந்த பட்டியலில் தற்போது அமலாபாலும் இணைகிறார். இவர் 2010 இல் மைனா படத்தில் கதாநாயகியாக நடித்து பிரபலமானார். விஜய், விக்ரம், ஜெயம்ரவி, தனுஷ் போன்றோருடன் ஜோடி சேர்ந்து குறுகிய காலத்திலேயே முன்னணி கதாநாயகியாக உயர்ந்தார். 2 வருடத்துக்கு முன்பு மதராச பட்டணம், தெய்வ திருமகள், தாண்டவம், தலைவா உள்ளிட்ட படங்கள் இயக்கி முன்னணி இயக்குனரான விஜய்யை காதல் திருமணம் செய்து கொண்டார்.


## புயல் வேகத்தில் நிக்கி கல்ராணி

தமிழில் டார்லிங் படம் மூலம் அறிமுகமானவர் நிக்கி கல்ராணி. அதன்பின் ஆதி ஜோடியாக 'யாகாவாராயினும் நாகாக்க', பாபி சிம்ஹா ஜோடியாக 'கோ 2' படங்களில் நடித்தார். ஆனால் நிக்கி கல்ராணிக்கு பெரிய அடையாளமாக அமைந்தது 'வேலைன்னு வந்துட்டா வெள்ளைக் காரன்' வெற்றி தான். இத்தனைக்கும் அந்த படத்தில் பெரிய கரக்டரும் கிடையாது. வழக்கமான ஹீரோயின் தான். ஆனால் பட வெற்றி நிக்கியை பிரபலமாக்கியுள்ளது. நிக்கி கல்ராணி கையில் இப்போது ஐந்து படங்கள். லாரன்ஸ் ஜோடியாக 'மொட்ட சிவா கெட்ட சிவா', ஜி.வி. பிரகாஷ் ஜோடியாக 'கடவுள் இருக்கான் குமாரு', விக்ரம் பிரபு ஜோடியாக 'நெருப்புடா' படங்களில் நடிக்கும் நிக்கி கல்ராணிக்கு வாய்ப்புகள் தேடிக்குவிகின்றன.





டேவிட் பட அனுபவத்தினால் வெற்றிமாறன் இயக்கும் 'வடசென்னை' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்க அழைத்தபோது மறுத்துவிட்டார் ஜீவா. தற்போது அந்த வேடத்தில் நடிக்க விஜய் சேதுபதியை அணுகியிருக்கிறார் தனுஷ். நடிக்கக் கேட்ட உடன் 'வடசென்னை' படத்தில் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டாக நடித்தாலும் எனக்குப் பெருமையே எனச் சொல்லி அந்த ரோலில் நடிக்க ஓகே சொல்லி விட்டாராம் விஜய் சேதுபதி.



## நட்புக்கு மரியாதை!




# ஆரோக்கிய வாழ்வில் பாரம்பரிய மருத்துவமும் தற்போதைய தேவையும்

தற்போது உலக நாடுகள் அனைத்தினதும் கவனம் இயற்கை மருத்துவத்தை நோக்கித்திசைதிரும்பிக்கொண்டிருப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது. பாரம்பரிய மருத்துவத்தின் உள்ளார்ந்த மதிப்பானது அறிவியல் சமூகத்தின் மத்தியில் விழிப்புணர்வினை ஊட்டி வருகின்றது. பாரம்பரிய மருத்துவ முறையானது நிறைவை உண்டாக்குகின்ற மாற்று மருத்துவ



முறை யெனவும் ஒவ்வொரு நாட்டிற்கும் மதங் களிற்குமிடையேயும் தனித்துவமாக பேணப்பட்டு வருகின்றதெனவும் கலாசாரங்கள், வரலாறுகள், தனியொருவர் குணா திசயங்கள், தத்துவங்கள் போன்றவற்றில் தங்கி நிற்கின்றது என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. இதன் விளைவாக இலங்கையைப் பொறுத்த வரை தொன்றுதொட்டு பேணிப் பயன்படுத்தப் படுகின்ற ஆயுர்வேத மருத்துவம், சித்த மருத்துவம், யுனானி மருத்துவம் போன்றன சமுதாயத்தில் சவால்களுக்குரிய சுகாதார தேவைகளை பூர்த்திசெய்து பக்க விளைவற்ற ஆரோக்கிய சமுதாயத்தை கட்டியெழுப்ப முனைகின்ற மரபுமுறை சிகிச்சை முறையாகக் காணப்படுகிறது.

சித்த மருத்துவ வரலாற்றை நோக்குமிடத்து, முழுமுதற் கடவுள் சிவபெருமான் உமையம்மையாருக்குக் கூறியதாகவும் உமையம்மை முருகனுக்கும் முருகன் அகஸ்தியர், திருமூலர் முதலான சித்தர்களுக்கு உபதேசித்ததாகவும் இச்சித்தர்கள் வழி வந்ததே அளப்பெரும் சித்த மருத்துவமாகும். பல வரலாற்றுச் சிறப்புகளை கொண்ட இலங்கைத்தீவானது சிவபக்தனான இராவணனால் ஆளப்பட்டது. இரா வணன் சிவபக்தனாக மட்டுமன்றி சிறந்த வைத்தியனாக விளங்கியதற்கு பல சான்றுகள் காணப்படுகின்றன. துரதிஷ்டவசமாக எமக்குக் கிடைக்கப் பெறாத போதும் சில நூல்கள் சிங்கள மொழியில் வழக்கிலுள்ளமை காணக் கூடியதாகவுள்ளது. தென்னாடுடைய சிவனே போற்றி எனுங் கூற்றானது பாரதத்தின் தென்னாடுகளான தமிழ்நாடுஇ கேரளம் மட்டுமன்றி அதற்கும் தெற்கே காணப்படும் இலங்கைத் தீவையும் சுட்டி நிற்கிறது. தென்னாடுகளில் சிவவழிபாடு எவ்வளவு தூரம் ஆதியானதோ சித்தருள் சித்தரான சிவபெருமானால் அரு ளப்பட்ட சிவசம்பிரதாயமான இம் மருத்துவமானது சித்தர்கள் வழி வந்தமையால் சித்த மருத்துவம் என்றும் தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வந்தமையால் தமிழ் மருத்துவமென்றும் பெயர் பெற்றுள்ளது.

சித்த மருத்துவத்தின் அடிப்படையானது இ மனித உடலானது 96 தத்துவங்களை உள்ளடக்கியதெனவும் இவை உடல் கட்டமைப்பு, உடல்தொழிலியல் உளவியல் மற்றும் அறிவுசால் கருமங்களை உள்ளடக்கியதாகக் காணப்படுகிறது. உடலில் 72000 நாடி நாளங்கள் இ 1300 நரம்புகள் அத்துடன் உடலில் ஏற்படும் நோய்கள் 4444 எனவும் கூறப்பட்டுள்ளது.

சித்தர்கள் முக்காலத்தையும் உணர வல்லவர்கள். அவர்கள் அருளிய வைத்திய முறைகள் எக்காலத்திற்கும் பொருந்தியனவாக அமைந்துள்ளன. மேல் நாட்டு மருத்துவம் எம் நாட்டில் வேரூன்றத் தொடங்கும் முன்பே நம் நாட்டு மருத்துவக்கலை பல ஆயிரம் ஆண்டிற்கு முன் தோன்றியது. வர்மம், முப்பு, கட்டு போன்றனவற்றை தன்னகத்தே கொண்ட உயர் மருத்துவமாகும். நரை திரை மூப்பு பிணி போன்றன அணுகாமல் இருக்க காய கல்ப மூலிகைகள் பயன்படுத்திவரும் மருத்துவமாகும். மூலிகை மருந்துகள் மனிதருக்கு பக்கவிளைவினை ஏற்படுத்தாதவை என்பதை அறிந்து சில உலக நாடுகளில் பெரும்பாலான மக்கள் பின்பற்றத் தொடங்கிவிட்டனர்.

'வருமுன் காப்பது வாழ்வுக்கு அழகு' என்ற சித்தர்களின் மெய்பொருளை நாம் உணர்ந்தாக வேண்டிய தருணத்தில் இருக்கிறோம். 'உடலை வளர்த்தேன் உயிர்வளர்த்தேன் இ உடம்பார் அழியின் உயிரார் அழிவார்' எனும் திருமூலரின் கூற்று உடலைப்பேணும்முக்கியத்துவத்தை உணர்த்துவதாக அமைகிறது.

இலங்கையில் சித்த மருத்துவமானது பொதுமருத்துவம் சிறப்பு மருத்துவம் என இரு பிரிவுகளாக வளர்ச்சி கண்டுள்ளது. பொதுமருத்துவமானது சாதாரணமாக ஏற்படக்கூடிய நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் துறையாக உள்ளது. சிறப்பு மருத்துவமானது சில விசேட காரணங்களின் அடிப்படையில் பல்வேறு துறைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஈழத்து சித்தமருத்துவ உலகில் பின்வரும் சிறப்புச் சித்த மருத்துவத்துறைகளான குழந்தைப் பிணி வைத்தியம், ஸ்திரீ ரோக சிகிச்சை, கர்ப்பரோக சிகிச்சை, வாத வைத்தியம், விஷக்கடி வைத்தியம், மனநோய் வைத்தியம், கட்டு வைத்தியம், முறிவு நெரிவு வைத்தியம், கண்வைத்தியம் போன்றன வழக்கிலுள்ளன. இத்துறைகளில் நிபுணத்துவம் வாய்ந்த பல வைத்தியர்கள் அரும்பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


குழந்தைப்பிணி வைத்தியத்தைப் பொறுத்தவரை குழந்தைகளுக்கு ஏற்பட்ட நோய்களுக்கு சிகிச்சையளிப்பது மட்டுமன்றி அவர்களுக்கு நோய்வராமல் தடுப்பதாகவும் அமைகிறது. கோரோசனை சேர்ந்த முக் கூட்டு மாத்திரைஇ கோரோசனை மாத்திரை என்பன பயன்படுத்தப்பட்டு வருகின்றன. குழந்தை பிறந்த சில நாட்களிலிருந்து கோரோசனை மாத்திரையை தாய்ப்பாலிலுரைத்து நாக்கில் தடவுவர். இவ்விதமாக வாரத்திலொரு தடவை செய்து வருவர். இதன்பயனாக குழந்தைகளுக்கு சளி, காய்ச்சல், அஜீரணம், வயிற்றுப்பொருமல் போன்றன ஏற்படாது தடுக்கிறது. அடுத்து கற்பூரவள்ளி இலையும் குழந்தை மருத்துவத்தில் முக்கியத்துவம் பெறுகிறது. குழந்தைகளுக்கு சுவாசாசய ரோகங்கள் ஏற்படும் போது கற்பூரவள்ளி இலை வெதுப்பிய சாறுடன் பனங்கற்கண்டு சேர்த்துக் கொடுத்துவர பல தொற்றுநோய்கள் தவிர்க் கப்படுகிறது. அடுத்து கிரந்தி எண்ணெய் முக்கியத்துவம் பெறுகிறது. இதனால் குழந்தைப் பருவத்திலிருந்தே ஏற் படக்கூடிய தோல் நோய்களிலிருந்து நிவா ரணம் கிடைக்கிறது. அடுத்ததாக ஸ்திரீ ரோகவைத்தியம், கர்ப்பிணிரோக வைத்தியம் என்பன பெரும்பாலும் பாட்டி வைத்தியம் என சொல்லப்படும் வீட்டு வைத்திய முறை மூலமே குணப்படுத்தப் பட்டு வந்துள்ளது. வீட்டு வைத்தியத்திற்கு அடுத்தபடியாக தமது நோய்களை சித்த வைத்திய சிகிச்சை மூலமும் ஆலோசனைகள் மூலமும் குணம் பெற்று வந்துள்ளனர்.

அடுத்து வாத ரோக சிகிச்சையை நோக்கு மிடத்து பொதுசிகிச்சையில் அடக்கப் பட்டுள்ள போதும் தாக்கம், நாட்பட்ட தன்மை என்பவற்றினடிப்படையில் சமூகத்தில் முக்கிய இடம்பெற்றுள்ளது. நஞ்சியல் துறை ஒருகாலத்தில் சிறப்புற்று இருந்த போதும் தற்காலத்தில் அருகி வருவதனைக் காணக் கூடியதாகக் காணப்படுகிறது. தாவர, தாது இனங்கள் மூலம் ஏற்படுகின்ற நஞ்சுகளுக்கு பெரும்பாலும் பொது சிகிச்சை முறை மூலமே சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. விசகடி வைத்தியத்தில் பார்வை பார்த்தல், நூல்கட்டுதல் மந்திர ஜபம் என்பன முக்கிய இடத்தைப் பெறு கின்றன. மனநோய் வைத்தியத்தைப் பொறுத்தவரை உடலைப்போலவே மனமும் நோய்வாய்ப் படக்கூடியது என்று கூறப்பட்டுள்ளது. உடலில் ஏற்படும் நோய்கள் மனத்தையும் மன நோய்கள் உடலையும் பாதிக்கக் கூடியதாகக் காணப்படுகின்றது. 'மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும் மறுப்பதுள நோய் மருந்தெனச்சாலும்' என திருமூலர் கூறியுள்ளார். அதாவது சாதாரண உளத்தாக்கங்கள் உணர்ச்சிக் கோளாறுகளால் உண்டாகும் நோய்களிற்கு பொது சிகிச்சை முறை மூலமே வைத்தியம் மேற்கொள்ளப்படுகிறது. உளரீதியான பாதிப்புகளுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டக் கூடிய நிலையிலிருக்கின்றனர். சத்திர சிகிச்சை முறை பற்றி ஈழத்து சித்த வைத்திய நூலான பரராசசேகரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள போதும் தற் போதைய இத்துறைசார்ந்த வளர்ச்சி மிகவும் அருகி வருவதையே காணக் கூடியதாக வுள்ளது. சத்திரசிகிச்சையானது தேவைக்கேற்ப திரி படைந்து கட்டுவைத்தியம், முறிவு நெரிவு வைத்தியம் என்பனவாக வளர்ச்சியடைந்துள்ளது. அறுவை மருத்துவம் தொடர்பாக கட்டுகள், பிளவைகள், புற்றுநோய் முதலான நோய்களுக்கான சிகிச்சை முறைகள் கூறப்பட்டுள்ளது. இறுதியாக கட்டு வைத்தியத்தை நோக்குமிடத்து பல்வேறு விதமான கட்டிகள், கட்டுகள், விரணங்கள், பிளவை பகந்தரரம், புண்கள் முதலிய பல்வேறு வியாதிகளுக்கான சிகிச்சை முறைகளைக் கூறுகின்றது.

**சித்தமருத்துவமானது உணவே மருந்து எனக் கூறிநிற்கிறது. உண்ணப்படும் உணவின் போசணைக் கூறுகளின் சமநிலை உடலின் தேவைக்கேற்ப காணப்படவேண்டும். சூழலிலிருந்து அந்தந்த பருவகாலத்தில் இயற்கையாக கிடைக்கின்ற உணவுகள் அந்தந்தக் காலங்களில் பொருத்தமாக உண்ணப்படுவது சிறந்தது என்று கூறப்படுகிறது. அறுசுவைகளில் முதலில் இனிப்புச் சுவை உள்ள உணவு உண்பதன் மூலம் வாதம் சமநிலைப்படும் என்றும் உப்பு, புளிப்பு, கார்ப்பு சுவை உள்ள உணவுகள் இடையில் உண்ணப்படுவதனால் பித்தம் சமநிலைப்படும் என்றும் கைப்புச்சுவையுள்ள உணவு இறுதியாக உண்ணப்படுவதனால் கபம் சமனிலைப்படும் என்றும் கூறப்படுகிறது. இரைப்பையினுள் அரை வயிறு உணவும் கால்வயிறு நீரும் கால்வயிறு காற்றும் இருக்கத்தக்கவாறு உணவு உண்ணப்பட வேண் டும். காலை உணவானது அவசியம் உண்ணப்படவேண்டும். அத்துடன் பழங்கள் சேர்த்து உண்ணப்படுவது சிறந்தது என்று கூறப்படுகிறது. இரவு உணவுக்குப்பின் நீண்ட இடைவேளை காணப்படுவதால் காலை உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். மதிய இரவு உண்ணப்படும் போது 15 நிமிடங்களுக்கு முன் சிறுதுண்டு இஞ்சி ஒரு அரிசி எடை இந்துப்பு கூட்டி அருந்தும்போது உணவு நன்கு சமிபாடடைந்து உணவுக்கால்வாய் தொகுதியின் சீரான தொழிற்பாட்டுக்கு உதவுகின்றது. உண்பதற்கு 15 நிமிடங்களின் முன் நீர் அருந்தப்பட வேண்டும் என்றும் உணவு உண்ட பின்பு ஒரு கோப்பை நீர் அருந்தவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. உணவானது அதிக சூடாகவோ அதிக குளிர்மையாகவோ இருக்கக் கூடாது. அத்துடன் நன்கு மென்றும் சுவைத்தும் உண்ணப்பட வேண்டும். உணவு உண்ணப்படுகின்ற சூழல் மன அமைதியைத் தரக்கூடியதாகவும் இதமான மனமகிழ்வினைத் தரக்கூடியதாகவும் இருக்கவேண்டும். உணவு உண்ட பின்பு உடலுக்கோ மனதுக்கோ உளைச்சல் தரக்கூடிய காரி யங்களில் ஈடுபடக் கூடாது. இரவு உணவு காலம் தாழ்த்தி உண்ணக்கூடாது . இரவு உணவு உண்ட பின் உடனடியாக நித்திரைக்குச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். இரவு படுக்கைக்குச் செல்லுமுன் நன்கு வற்றக் காய்சிய பால் பருகுவது சிறந்தது என்று கூறப்படுகிறது.**



**டாக்டர் ரோஹினி பூபாலசிங்கம்** (BSMS)
**ஆயுர்வேத மருத்துவ அதிகாரி.**



## போட்டிச் சிறுகதை 13

பெயர் : உமாராணி பிரேமச்சந்திரன்
முகவரி : நாவலம்பதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
சிறுகதை : கோபாலு என்கின்ற கோபால கிருஷ்ணன்

# கோபாலு என்கின்ற கோபால கிருஷ்ணன்

காலை நேரச் சூரியனின் கதிர்கள் அந்த குடிசை வீட்டில் கேட்டுக்கேள்வி இல்லாமலே புகுந்திருந்தன. நேரம் ஏழு மணியை நெருங்கிவிட்டது. ஆதரவாய் நகரத்து பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை அழைத்துச் செல்கின்ற அந்த மினிவான் பெரிதாய் கோர்ண் அடித்துக்கொண்டே சென்றது.

நாலா பக்கமும் கட்டுக்கடங்காமல் ஓலைகள் துருத்திக்கொண்டிருந்த பாயிலே



அங்கும் இங்கும் புரண்டு புரண்டு படுத்தான் கோபாலு.

பனிக்குளிர் இன்னும் விட்டுப்போக வில்லை. போர்வையாய்ப் பாவித்த நைந்து நூலாய்ப்போன சேலை, பாயின் மூலையில் அநாதையாய் குவிந்து கிடந்தது. அதை போர்த்திக்கொண்டு நித்திரைச் சுகம் காணும் நிலையில் அவன் இல்லை.

நேற்று பாடசாலையில் நடந்த சம்பவம் அவன் நித்திரைக்கு மட்டுமன்றி நிம்மதிக்கும் தடையுத்தரவு பிறப்பித்திருந்தது.

'கோபாலு, ஏன் ராசா கிடக்கிறாய். பள்ளிக்கூடத்துக்கு நேரமாச்செல்லே. எழும்பனணை".

ஒரு தாய்க்கே உரித்தான பரிவும் அக்கறையும் அந்தக் கேள்வியில் தொனித்தது.

'நான் இண்டைக்குப் பள்ளிக்கூடம் போகேல்லை" சொல்லிக்கொண்டே கோபாலு மற்றப்பக்கம் திரும்பிப் படுத்தான்.

'ஏன் ஜயா"? ஏழைத்தாய் ஒருத்திக்கு இருக்கக்கூடிய அத்தனை (அவ) லட்சணங்களும் பொருந்திய அந்தத்தாய் கேட்டுக் கொண்டே பக்கத்தில் அமர்ந்து தலையைத் தடவிக் கொடுத்தாள்.

'பேனை முடிஞ்சு போச்சு. அதாலை நேற்று கடைசிப் பாடவேளை எழுதாமல் இருந்திட்டன், அதுக்கு சமய பாட வாத்தியார், ' உனக்குக்கென்னடா எழுதிப்படிக்கப் பஞ்சியாக் கிடக்கோ" எண்டு பாடம் முடியுமட்டும் வெய்யிலுக்கை நிக்க விட்டிட்டார்."

அத்தோடை, 'நாளைக்குப் பேனை இல்லாமை வந்தியெண்டா உன்னை அதிபரிட்டத்தைதான் அனுப்புவன் எண்டு கண்டிப்பாய்ச் சொல்லி விட்டவர்"

ஆசைப்பிள்ளையார் கண்ணை மூடி மூன்று வருசமாய்ப் போச்சு. குமரும், குஞ்சுகளுமாய் அஞ்சோடை, அவற்றை மனுசி சரஸ்வதி படுற பாட்டைப் பார்த்தா கல்நெஞ்சக்காரனும் கலங்கித்தான் போவான்.

அடைப்புத் திறப்பு இல்லாத ஒரு மண் குடிசை. அது தான் அவையளின்ரை இருப்பிடம். அஞ்சாறு சீவன்கள் அதுக்கை படுத்தெழும்பிச் சீவிக்கிறது ஒரு ஆச்சரியமான விசயம்தான்.

வயலிலை களை பிடுங்கிறது எண்டாலும் சரி வெங்காயம் நடுகை புல்லுக் கொத்துகை எண்டாலும் சரி மனுசி பஞ்சி அலுப்பில்லாமல் செய்யும். பத்தாததுக்கு பின்னேரத்திலை ஒரு கடகத்தை கக்கத்துக்கை வைச்சுக் கொண்டு எருப்பொறுக்க எண்டு வெளிக்கிட்டிடும்.

பாவம் தன்ரை அஞ்சு குஞ்சுகளையும் நினைச்சு, அதுகளை வளர்த்து மனிசராக்கி போட வேணும் எண்ட வைராக்கியத்திலை இப்பிடி மாடு மாதிரி உழைக்குது.

"என்னம்மா நான் சொல்லிக் கொண்டு இருக்கிறன். நீ பேசாமை இருக்கிறாயணை" கோபாலு என்கின்ற அந்தக் கோபால கிருஷ்ணன் சிணுங்கிக் கொண்டே கேட்டான்.

"என்ன ராசா அண்டைக்குத்தானே பேனை வேண்டித் தந்தனான் அதுக்கிடையிலை முடிஞ்சிது எண்டா நான் என்ன செய்ய?" ஏழைத்தாயின் இயலாமை வார்த்தை வடிவெடுத்தது .

"அப்ப சரி கதையை விடணை அம்மா. நான் இண்டைக்குப் பள்ளிக்கூடம் போறதில வேலையில்லை" கோபாலுவுக்கு கோபம் சுருக்கென்று ஏறியது.

"ஜயா.. அப்பிடி மட்டும் சொல்லிப் போடாதையணை. கொக்காளுக்கும் படிப்பு ஓடேல்லை. நீயெண்டாலும் படிச்சு நல்ல நிலைக்கு வரவேணும். என்ரை பிள்ளை படிச்சு பெரியவ்னாகி உத்தியோகம் பாக்க வேணும்."

தம்பி தங்கச்சியவையைப் படிப்பிக்க வேணும். அதுதானே அம்மா இப்பிடிக் கஷ்டப்படுறன்"

கண்களில் கனவு மின்ன கெஞ்சல் பாவனையோடு கோபாலுவைப் பார்த்தால் சரஸ்வதி "அப்ப நான் என்னணை செய்யுறது?" கோபாலு சற்று அடங்கியே கேட்டான்.

"தம்பற்றை கடையிலை என்னைச் சொல்லி ஒரு பேனை வேண்டு. நான் பிறகு காசு குடுக்கிறன்"

"ஜயோ நான் அங்கை போக மாட்டன்" தேள் கொட்டியவன் போல துள்ளி எழுந்தான் கோபாலு. "அந்த ஆளின்ரை குணம் உனக்கு தெரியாதோ? செருக்குப் பிடிச்ச மனிசன். கடைக்கு போனா எங்களை ஏனெண்டும் கேளாது. அண்டைக்கொரு நாள் நான் கடனுக்கு பாண் வேண்டப் போய்ப் பட்ட பாடு தெரியுமே. ஆக்களுக்கு முன்னாலை மானக்கெடுத்திப் போட்டுது. கொம்மாவுக்கு பின்னால நீயும் போனா, பாணுக்கெண்டாலும் உழைக்க மாட்டியோ எண்டு என்னைக் கேக்குது" விரக்தியும் வெறுப்பும் அவன் வார்த்தையில் அப்பட்டமாய்த் தெரிந்தது.

ஏழைகளான எங்களை மட்டம் தட்டிக் கதைக்கிறதிலை உவைக்கு அப்படி என்ன சந்தோசம் கிடைக்குது.

உவையள் எல்லாரும் பாக்கும் படிக்கும் நீ நல்லாப் படிச்சு உத்தியோகம் பாத்துக் காட்ட வேணும்.

சரஸ்வதி கோபாலுவைத் தேற்ற முனைந்தாள். கடைக்குட்டி ரம்மியா அதுக்கு ஐந்து வயதாகுது. நேசறிக்குப் போற வயது. அதோட்ட வயசுப் பொடியள், யூனிபோம் போட்டு தண்ணிப் போத்தல் கொழுவி சப்பாத்தும் போட்டுக்கொண்டு படிக்கப்போறதை ஏக்கத்தோடு பாக்குது.

ஆனாப் படிக்க அனுப்புறது எண்டாச் சும்மாவோ, அதுக்கேற்ற ஓர் சீர் வேண்டாமே. ஆதாலை ஒரேயடியாப் பள்ளிக்கூடத்திலை சேர்ப்பம் எண்டு முடிவெடுத்திருக்கு.

'ரம்மியா இஞ்சை வாடா ஓடிப்போய் தம்பற்றை கடையிலை ஒரு பேனை வேண்டி வந்து அண்ணாவிட்டைக் குடணை. காசு கேட்டா அம்மா பிறகு தருவா எண்டு சொல்லணை"

"நானும் ஒரு ரொபி வாங்கட்டோ?" ரம்மியா கெஞ்சிக் கேட்டாள்.

"தந்தா வாங்கு" ரம்மியாவைத் தம் மனப்படுத்தி அனுப்பி வைத்தாள் தாய்.

"ஜயா நீ வேளைக்கு வெளிக்கிடணை. தங்கச்சி இப்ப பேனையோடை வந்திடும்" பரபரப்பானான் கோபாலு நேரமும் நல்லாச் செண்டு போச்சு.

அப்ப தான் ரம்மியா அழுதுகொண்டே ஓடி வந்தது.

என்ன நடத்தது? அத்தனை பேரும் ரம்மியாவிடம் வந்தனர்.

"ரொபியைத் தரமாட்டன் எண்டு பேசிப் போட்டார். விடியக்காலமை கைவியளமாக உனக்கு கடனுக்கு ரொபி தரட்டோ? ஒரு சாமானும் தர ஏலாது ஓடு எண்டு துரத்தினவர். பிறகு கூப்பிட்டுப் பேனையை மட்டும் தந்து விட்டவர்."

'வேறை என்னவாம்?"

"ஆர் உங்களை படிச்சுக் கிழிக்கிறதுக்குப் பேனை எண்டு கேட்டவர். நான் கோபாலு அண்ணைக்கெண்டு சொன்னனான். அதுக்கு ஓ........... சொச்சக் குரக்கன் திரிக்க உவர் வெளிக்கிட்டிட்டாரோ எண்டு அங்கை நிண்டவைக்குச் சொல்லிச் சிரிச்சவர்"

"கடவுளே என்னையும் என்ரை பிள்ளையளையும் ஏன் இப்படிச் சோதிக்கிறாய்? உவை எல்லாரும் பாக்கும்படிக்கும் என்ரை பிள்ளை நல்லாப் படிச்சுப் பெரிய ஆளாக வர வேணும்" கண்களில் வழிந்த கண்ணீரை சரஸ்வதி சீலைத் தலைப்பால் துடைத்துவிட்டாள்.

"கோபாலகிருஷ்ணன் உம்மடை பேனையை ஒருக்காத்தாரும் சைன் பண்ணிப் போட்டுத்தாரன்"

வகுப்பறை நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த கோபாலுவை இடை மறிச்சா கணிதப் பாடம் படிப்பிக்கிற ஜமுனா ரீச்சர்.

பேனையை வாங்கிக் கொண்டு அவசர அவசரமாக அவ அதிபர் அறைக்குள்ளை நுழைஞ்சா. ரீச்சர் அப்பால் சென்ற பின்பும் அவ பூசியிருந்த சென்ற் வாசனை அந்த இடத்தையே ஆக்கிரமித்திருந்தது.

உவ்வளவு நாகரிகம் பண்ணிக்கொண்டு தெரிஞ்சவவுக்கு ஒரு பேனை கொண்டுவரத் தெரியாதோ? அல்லது கான்ட் பாக்கைத் திறந்து பேனை எடுத்தா மேக்கப் குலைஞ்சு போடும் எண்டு நினைக்கிறாவோ தெரியேல்லை.

கோபாலுவின் மனது நக்கலாக எண்ணிக் கொண்டது. ரீச்சர் வெளியிலை வரப் பேனையை பத்திரமாக வேண்டிப் போட வேணும் என்கின்ற அந்தரிப்பு கோபாலுவுக்கு.

அதாலை, அதிபரின்ரை அறை வாசலிலேயே கோபாலு நிண்டான். அந்த நேரம் பார்த்து அதிபர் பிரம்போடை வெளியிலை வந்தார். "பாவியர் செல்லுமிடம் பள்ளமும் திட்டியும்" என்பது சரியாய்ப் போய்விட்டது.

"வாரும் இங்கை ஏன் இதிலை நிண்டு திருட்டு முழி முழிக்கிறீர். தேவாரத்திக்கு பெல் அடிச்சது காதிலை விழேல்லையோ? ஓடும் வேளைக்கு" காட்டுக்கத்தல் போட்டுக்கொண்டே அதிபர், பிரம்பாலை விட்டார் ரண்டு கோபாலுவின் பின்புறத்திலை.

(தொடர்ச்சி ...18, இல்)

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 13

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................

சிறுகதையின் இலக்கம் : ..............................

எழுதியவர் பெயர் : ..............................

சிபார்சு செய்பவர் பெயர் : ..............................

முகவரி : ..............................

தொலைபேசி இலக்கம் : ..............................

.............................. ஆகிய நான்

இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.


..............................

ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# எம்.ஜி.ஆர். ஃபார்முலா இல்லாமல் வெற்றிக் கொடி நாட்டிய படம்!



தமிழ் சினிமா உலகிற்கு தரமான படங்களை தயாரித்தளித்திருக்கும் நிறுவனம் ஏவிஎம். இதன் அதிபர் ஏவி மெய்யப்பன் அவர்களின் பெயரின் சுருக்கம்தான் 'ஏவிஎம்"! இந்த நிறுவனம் கருப்பு வெள்ளை காலத்தில் 'சபாபதி' (1941), 'நாம் இருவர்', 'வேதாள உலகம்', 'வாழ்க்கை', 'ஓர்இரவு', 'பராசக்தி', 'அந்தநாள்', 'களத்தூர் கண்ணம்மா', 'குழந்தையும் தெய்வமும்', 'ராமு', 'மேஜர் சந்திரகாந்த்', என்று பல படங்களைத் தயாரித்து வெளியிட்டது. அப்பொழுது திரு. ஏ.வி.மெய்யப்பன் அவர்களைச் சந்திப்பவர்களெல்லாம் 'நீங்கள் ஏன் கலரில் படம் எடுக்கக் கூடாது?" என்று கேட்டார்கள். அதற்கு ஏவி மெய்யப்பன் அவர்கள், "கலர் படம் எடுக்கணும்னா நல்ல கலர்புல்லான ஹீரோ வேண்டும். அதற்கு பொருத்தமான கதை வேண்டும். அதைச் சிறப்பாக எடுத்து தருகின்ற டைரக்டர் வேண்டும். இவைஅனைத்தும் ஒருங்கே அமைந்தால் தான் சிறப்பான கலர் படம் எடுக்க முடியும்," என்று சொன்னார்.

அவர் வாக்கும் பலித்தது. அவருக்கேற்ற கலர்புல்லான ஹீரோவாக எம்.ஜி.ஆர். அமைந்தார். நல்ல கதையும், அதைச் சிறப்பாக எடுக்கக்கூடிய டைரக்டர் ஏ.சி.திருலோகசந்தரும் அறிமுகமானார். அப்புறம் என்ன... ஏவிஎம் நிறுவனமும் கலம் படம் எடுக்கின்ற முயற்சியில் இறங்கியது. இதற்கு நடிகர் எஸ்.ஏ.அசோகன் அவர்களும் ஏற்பாடுகள் செய்தார். அவர் எம்.ஜி.ஆர். மற்றும் ஏவி மெய்யப்பன் அவர்களின் புதல்வர் சரவணன் ஆகியோருக்கு பொதுவான நண்பராக இருந்தார். எம்.ஜி.ஆரைச் சந்தித்து கலர் படம் எடுப்பதற்கு பேசியவர் அசோகன்தான். ஏவிஎம் எடுக்கும் கலர் படத்தில் நடிப்பதற்கு எம்.ஜி.ஆரும் சம்மதித்தார். (தமிழில் முதல் கலர் படம் எடுத்த பெருமைக்குரியவரே எம்ஜிஆர்தான்.. அது தனி கதை) . இந்தச் செய்தியை தனது தந்தை மெய்யப்பன் அவர்களிடம் தெரிவித்தார் சரவணன். எம்.ஜி.ஆர். அவர்களை வைத்து கலர் படம் எடுப்பதற்கு ஏவி மெய்யப்பன் அவர்களும் முழுமனதோடு சம்மதித்தார். எம்ஜிஆரைச் சந்திக்க டைரக்டர் ஏ.சி.திருலோகசந்தரை அனுப்பி வைத்தார்கள். இவர் ஏற்கனவே எம்.ஜி.ஆர். நடித்த 'குமாரி' படத்தின் தயாரிப்பாளர், டைரக்டர் பத்மனாபன் அவர்களிடம் உதவி இயக்குனராகப் பணியாற்றியவர். எம்.ஜி.ஆருடன் நெருங்கிய பழக்கம் இருந்ததால் இருவரும் சந்தித்து 'குமாரி' காலத்து சம்பவங்களை பற்றி மகிழ்ச்சியுடன் பேசிக் கொண்டார்கள். அதன் பிறகு கதையைச் சொன்னார். ஒரு பெரிய தொழிலதிபர் ஓய்வு எடுப்பதற்காக தான் யார் என்பதைக் காட்டிக் கொள்ளாமல் தனது எஸ்டேட்டில் வந்து தங்குகிறார். அங்கு அழகான ஒரு பெண்ணைச் சந்திக்கிறார். இருவருக்கும் காதல் ஏற்படுகிறது. இருவருக்கும் ஏற்படும் காதலையும், ஊடலையும் வைத்துதான் இந்தக் கதை பின்னப்பட்டிருக்கிறது என் றார்.

கதையைக்கேட்டஎம்.ஜி.ஆர், "திருலோக் இந்தக் கதை என்னுடைய படங்களின் ஃபார்முலாவில் எந்த வகையிலும் ஒத்துப் போகவில்லை. இது முழுக்க முழுக்க உங்கள் பொறுப்பு. இதைப் படமாக்கும் விதத்தில் தான் இதன் வெற்றி இருக்கிறது. நாங்களெல்லாம் பொம்மைகளாக இருக்கப் போகிறோம். ஆட்டுவிக்கப் போகிறவர் நீங்கள் தான். இதோ நான் தயார்," என்றார். ஏவிஎம் சரவணன், நடிகர் அசோகன் ஆகிய இருவரின் முயற்சியால் எம்.ஜி.ஆர். நடிக்கவும், ஏவிஎம் அதை எடுக்கவும் ஒப்புக் கொண்டார்கள். இந்தப் படத்தில் நடிப்பதற்காக 72 நாள் கோல்ஷீட் கொடுத்து உதவினார் எம்.ஜி.ஆர். இந்தப் படத்தில் நடிப்பதற்காக எம்.ஜி.ஆருக்கு கொடுக்கப்பட்ட தொகை ரூ.3.25 லட்சம். கதாநாயகியாக தேர்வு செய்யப்பட்ட சரோஜாதேவிக்கு 90 ஆயிரம் சம்பளமாக கொடுக்கப்பட்டது. இந்தப் படத்திற்கு 'அன்பே வா' என்று அழகான பெயரைச் சூட்டினார்கள்.

# உயிர் காக்கும் ரோபோ

இஸ்ரேலின் தலைநகரமான ஜெருசலத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் ஒரு அலை போன்ற இயக்கம் மூலம் முன்னோக்கி மற்றும் பின்னோக்கி நகர்த்தும் வல்லமை கொண்ட ஒரு முப்பரிமாண (3னு) தொழிநுட்பத்தினால் ஆன ரோபோ ஒன்றை உருவாக்கியுள்ளனர்.

அதன் அலை போன்ற இயக்கமானது அது எதிர்கொள்ளும் தடைகள் மீது ஏறவும், மணல், புல் மற்றும் சரளை போன்ற நிலையற்ற நிலப்பரப்பில் நீந்தவும், தவழவும் உதவுகிறது. முதல் ஒற்றை இயக்கி அலை போன்ற (first single actuator wave-like) ரோபோவான 'சா' (SAW) இஸ்ரேலின் நெகெவ்வின் பென்-குரியன் பல்கலைக்கழக (டீபுரு) ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வகை ரோபோக்கள் மருத்துவம், பாதுகாப்பு மற்றும் தேடுதல் மற்றும் மீட்புப்பணி போன்ற பயன்பாடுகளில் ஈடுபடுத்தப்பட இருக்கின்றன.

'சா" ரோபோவால் மணல், புல் மற்றும் சரளை போன்ற நிலையற்ற நிலப்பகுதி வழியாக, தடைகள் மீதேறி அலச முடியும். உடன் ஒரு நொடிக்கு 57 சென்டி மீட்டர் வேகத்தில் நகர முடியும், அதாவது இது போன்ற பிற ரோபோக்களை விட 5 மடங்கு அதிக வேகத்தில் நகர முடியும். 3டி ப்ரிண்டட் தொழில்நுட்பம் மூலம் உருவான இந்த ரோபோ செங்குத்தான அலையில் ஒரு புழு போன்ற அலை இயக்கம் பயன்படுத்தி முன்னோக்கி அல்லது பின்னோக்கி தன்னை நகர்த்திக் கொள்ள முடியும். உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் அலை இயக்கம் கொண்ட ரோபோவை உருவாக்க 90 ஆண்டுக ளுக்கும் மேலாக முயற்சி செய்து



வருகிறார்கள் என்பதும், வெவ்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு அளவுகளில் அமைக்கப்படவுள்ள ஒரு எளிய, தனிப்பட்ட தீர்வு மூலம் இஸ்ரேல் விஞ்ஞானிகள் இந்த உருவாக்கத்தில் வெற்றியடைந்துள்ளனர்.




போக்குவரத்து நெரிசலில் சிக்கி திணறும் நகர்ப்புறங்களுக்காக புதுமையான போக்குவரத்து சாதனங்களை உருவாக்கும் முயற்சிகள் உலகம் முழுவதும் நடந்து வருகின்றன. அந்தவகையில், கடந்த மே மாதம் சீனாவில் ஒரு பிரம்மாண்ட பஸ் மொடல் அறிமுகம் செய்யப்பட்டது. அது கொன்செப்ட் நிலையில் வெளியிடப்பட்டது. கொன்செப்ட் வெளியிடப்பட்டு இரண்டே மாதங்களில் உண்மையான டிராம் பஸ்சை உருவாக்கி சோதனை ஓட்டத்தையும் தொடங்கிவிட்டனர். என்ன ஒரு ஃபாஸ்ட் என்று சொல்லுமளவுக்கு மளமளவென உருவாக்கப்பட்டு சோதனை ஓட்டத்திற்கு தயாரான லேண்ட் ஏர்பஸ் என்று பெயரிடப்பட்டிருக்கும் இந்த பஸ் மொடலை சீனாவை சேர்ந்த டிரான்ஸ்போர்ட் எக்ஸ்ப்ளோரர் பஸ் என்ற நிறுவனம் தயாரித்துள்ளது. இதற்கு லாண்ட் பஸ் என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

சாலையின் இருமருங்கிலும் அமைக்கப்பட்டிருக்கும் தண்டவாளத்தில் செல்லும் இந்த பஸ்சின் தளம் இருக்கைகளுக்கான தளம் வாகன போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் அதிக இடைவெளியுடன் உயரத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. கீழே வாகனங்கள் தங்கு தடையின்றி செல்ல முடியும்.

சாலையில் பஸ்களால் ஏற்படும் போக்குவரத்து நெருக்கடி முற்றிலும் நீங்கும். அத்துடன், இந்த பஸ் போக்குவரத்து நெரிசலில் சிக்காமல் ரயில் போல எந்த இடையூறும் இல்லாமல் குறித்த நேரத்தில் இயக்க முடியும்.

தற்போது சாதாரண சாலைகளில் இந்த பஸ் இயக்கப்படவில்லை. சீனாவின் கின்ஹுவாங்டாவ் என்ற இடத்தில் அமைக்கப்பட்டிருக்கும் 300 மீட்டர் நீளமுடைய சோதனை ஓட்ட தடத்தில் இந்த பஸ் இயக்கி ஆய்வுகள் செய்யப்படுகின்றது.

இந்த பஸ்சில் 300 பேர் முதல் 1,400 பேர் வரை பயணிக்க முடியுமாம். எனவே, பொது போக்குவரத்தை பயன்படுத்துவோர் எண்ணிக்கை மிக அதிகமாக உயரும் என்று கணிக்கப்படுகிறது

இந்த பஸ்சை மணிக்கு 60 கிமீ வேகம் வரை இயக்க முடியும். தண்டவாள அமைப்பில் பயணிப்பதால், வளைவுகளில் கூட வேகத்தை அதிகமாக குறைக்க வேண்டியிருக்காது.

மாடிபஸ்போன்றுஇருக்கும்இந்தபஸ்சின் மேல்புறத்திற்கு செல்வதற்கு வசதியாக லிஃப்ட் வசதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, முதியவர்கள், குழந்தைகள், பெண்கள் என அனைவரும் எளிதாக ஏறி, இறங்க முடியும். வீல் சேரில் வருபவர்களுக்கும் மிகவும் உகந்தது.

நிறுத்தங்களில் பயணிகள் இறங்கும் போது பின்னால் வரும் வாகனங்களுக்கு எச்சரிக்கை கொடுப்பதுடன், தானியங்கி முறையில் தடுப்புகளும் செயல்படும். இதனால், பயணிகள் வெகு எளிதாக சாலையின் இருபுறத்திற்கும் செல்ல முடியும்.


இந்த பஸ்சின் கீழ் பகுதியில் கார்கள் உள்ளிட்ட சிறிய ரக வாகனங்கள் மட்டுமே கடந்து செல்ல முடியும். டிரக்குகள் போன்ற கனரக வாகனங்கள் கடந்து செல்வது கடினமாக இருக்கும். இல்லையெனில், அதுபோன்ற வாகனங்களை இந்த டிராம் பஸ் செல்லும் சாலைகளில் தடை செய்ய வேண்டியிருக்கும்.




# தேடல்பொறி, இணையம், இணையத்தளம் மற்றும் மின்னஞ்சல்

சில முக்கிய குறிப்புக்களை முதலில் தருகிறேன்.

1. முதலில் உங்களது இணைய பெயர் தளத்தை பெற்றுக் கொள்ளுங்கள். (Get Your Domain Name ...)
2. இணையதள தருனரை தெரிவுசெய்து அந்த நிறுவனத்துடன் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். (Choose a Web Host and Sign Up for an Account....)



3. உங்கள் இணையத் தளத்திற்கான பக்கங்களை வடிவமையுங்கள். (Designing your Web Pages. ...)
4. உங்கள் இணையத் தளத்தை பரிசோதியுங்கள். (Testing Your Website....)
5. கடன் அட்டை தகவலை திரட்டல் மற்றும் வருமானம் ஈட்டும் வழிகளை ஆராய்தல் - (Collecting Credit Card Information, Making Money....)
6. உங்கள் இணையத் தளத்தை விளம்பரப்படுத்தல். (Getting Your Site Noticed.)

**கேள்வி :**

எனது பெயர் துஷா. யாழ்ப்பாணத்தை சேர்ந்தவள். எனது பிரச்சினை என்னவென்றால், எப்போதும் நான் Pen Drive ஐ போட்டதும், "You need to format the Disk in Drive E, before you can use it." என்று வருகிறது. இதற்கு என்ன செய்யலாம்? இந்த பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம்? தயவுசெய்து அறிவுரை தாருங்கள்.

**பதில் :**

அன்பரே! இந்த பிரச்சினைக்கு பல காரணாங்கள் உண்டு.


நீங்கள் உங்கள் கணினியில் உள்ள அனைத்து USB Ports களை பரீட்சித்து பார்க்கலாம்.

அல்லது

கணினியில் அந்த வேளையில் இயங்கும் அனைத்து நிகழ்ச்சிகளையும் நிறுத்தி விட்டு, Virus Scan ஒன்றை செய்துவிட்டு, கணினியை Re-Start செய்து மீள் பரீட்சித்து பார்க்கலாம்.

அல்லது

Device Manager ஐ பயன்படுத்தி Scan செய்து பாருங்கள். கணினியில் ஏற்படும் ஏதேனும் வன்பொருள் மாற்றங்களை தெளிவாக தெரிந்துகொள்ள இது



உதவியாக இருக்கும். இந்த Scan செயல்முறை முடிவடைந்ததும் உங்களால் USB Port பற்றிய தெளிவான படவரைபை புரிந்துகொள்ளலாம். அதன் மூலம் நீங்கள் பயன்படுத்தும் USB Port kw;Wk; Pen Drive குறித்தும் அறிந்து கொள்ளலாம்.

அதற்கான தெளிவான வழிமுறைகளை கீழே தந்துள்ளோம்.

முதலில் நீங்கள் செய்ய வேண்டியது:

Click Start, and then click Run.

Note (குறிப்பு) நீங்கள் விண்டோஸ் பயனாளியாயின்,

Start Control Panel All Control Panel Items → Administrative Tools → Computer Management → Device Manager

என்ற தெரிவை மேற்கொள்க.

1. In Device Manager, click your computer so that it is highlighted. (இங்கு உங்களுக்கு தேவையானவன் பொருள் உறுப்பை தெரிவுசெய்து பரீட்சித்து பார்த்து கொள்ளலாம்.)
2. Click Action, and then click Scan for hardware changes.
3. Check the USB device to see whether it is working. (இதில் உங்களது Pen Drive ஐ தெரிவுசெய்து, அது முறையாக இயங்குகிறதா என்று பார்க்கலாம். இதன் மூலம் உங்கள் வன்தட்டு உறுப்புக்களை பரீட்சித்து அதற்கான மாற்று தீர்வுகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

(தொடரும் ...)

**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com

ஜெ.யோகராஜ் (**email : yogaraj35@gmail.com**)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

# குற்றவாளிகள் யார் ?

இரவு எட்டு மணியளவில் நாய்க்கூடு திறக்கப்பட்டு நான் வெளியே எடுக்கப்பட்டேன். அம்மா மீதும் அப்பா மீதும் எனக்கு சரியான கோபமாய் இருந்தது.

சுாப்பாடு தந்தார்கள், சாப்பிடகூடாது என நான் நினைத்தாலும் தாங்க முடியாத பசி காரணமாக நான் சாப்பிட்டேன். சாப்பாடு முடிந்ததும் நான் படுக்கையில் போடப்பட்டேன்.

அம்மாவும் அப்பாவும் ரிவி பார்த்து கொண்டு இருந்தார்கள். நானோ நித்திரையின்றி படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தேன். அம்மாவிலும் அப்பாவிலும் எனக்குச் சரியான வெறுப்பாய் இருந்தது. அவர்கள் தான் என்னுடைய எதிரிகள் என நினைத்தேன்.

திடீர் என இருக்கையை விட்டு எழுந்த எனது அம்மா மீண்டும் என்னை அடிக்க வருகின்றா இனியும் அடிவாங்க தயாராய் இல்லை. பக்கத்தில் கிடந்த தும்புக்கட்டையை எடுத்து அம்மாவை அடிக்கின்றேன். அய்யோ அய்யோ என அம்மா அவலக் குரல் எழுப்புகின்றா. அம்மாவின் அவலக்குரல் என் மனதிற்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்த மகிழ்ச்சிக்காக அம்மாவுக்கு நான் தொடந்தும் அடிக்கின்றேன்.

இப்போது அப்பா எனக்கு அடிக்க ஓடி வருகின்றார். வெறி கொண்டவன் போல் அவரையும் அம்மாவுக்கு மேல் தள்ளி விழுத்தி ஆவேசம் கொண்டவன் போல் அடிக்கின்றேன். அப்போது திடீர் என அவர்கள் இருவரும் சேர்ந்து நாய் கூட்டிற்குள் அடைத்தால் என்ன செய்வதென்ற பயம் என் மனத்தில் எழுகின்றது. உடனே நான் முயன்று கண்களை விழிக்கின்றேன்.

நான் படுத்துக்கிடந்த அறை முழவதும் ஒரே இருட்டாய் இருந்தது. கைகளால் தடவிப் பார்த்த போது கட்டிலில் நான் படுத்துக்கிடப்பது தெரிந்தது. அறைக்கு வெளியே ரிவி ஓடும் சத்தம் கேட்டது.

கனவில் என் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் அடித்தது என் மனதுக்குப் பெரும் மகிழ்ச்சியை தந்தது. அந்த மகிழ்ச்சியுடன் நான் மீண்டும் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கினேன்.

படிப்பு படிப்பு என அம்மாவினதும் அப்பாவினதும் நச்சரிப்பு என் வாழ்வில் தொடர்ந்து கொண்டே இருந்தது. நிம்மதி இல்லாமல் சந்தோசத்தை அறியாமல் அன்பையும் அரவணைப்பையும் என்னவென்று தெரியாமல் வளர்ந்து கொண்டிருந்த என் மனதில் வன்முறை உணர்வுகள் துளிர் விட ஆரம்பித்தது.

இவ்வாறு வளர்ந்து கொண்டிருந்த நான் இப்போது A/L படித்துக்கொண்டிருந்தேன். யாழ்ப்பாண பாடசாலை ஒன்றில் நான் A/L படித்ததால் என் சுதந்திரம் அதிகமானது. மனதில் சந்தோஷம் வேண்டுமானால் உடனே சாப்பிடுங்கள் பீடா என ஒரு பாடசாலை நண்பன் எனக்கு பீடா வெத்திலை தந்தான். அதை சாப்பிடும் போது இனம் புரியாத ஒரு இன்பம் என் மனதில் ஏற்பட்டது. உடல் உற்சாகம் பெறுவது போல் இருந்தது.

பீடாவில் ஆரம்பித்த என் இன்பம் சிகரட், பியர் என வளர்ந்து இறுதியில் போதைப் பொருள் பாவனையில் முடிந்தது. இப்போது எனது தனிப்பட்ட செலவுகளுக்குப் பணம் தேவைப்பட்டது.

அதற்காக நான் வீட்டில் திருட ஆரம்பித்தேன். வீட்டில் திருடிய பணம் என் செலவுகளுக்குப் போதுமானதாக இருக்கவில்லை. அதனால் அகிலன் குறுப்பில் இணைந்து பணத்திற்காக வெட்டு குத்துகளில் ஈடுபட்டன். வீடுகளுக்கு புகுந்து கொள்ளையடித்தேன். அதன் விளைவு இன்று என் எதிர்காலத்தைப் பறி கொடுத்து விட்டு இந்தச் சிறைக்குள் கிடக்கிறன்.

இப்போது சொல்லுங்கோ இந்த மா பெரும் துன்ப சுமையை எனக்குத் தந்தவர்கள் யார்? என் சின்னச் சின்ன ஆசைகளையும் விருப்பங்களையும் அன்று மதித்து என்னை அன்புடன் அரவணைத்து வாழ்க்கை பற்றிய அறிவை எனக்குப் புகட்டி என்னை வளர்த்திருந்தால் நான் இப்படி ஆகியிருப்பேனா சொல்லுங்கள்? என் எதிர்காலத்தைச் சிதைத்தது யார் யார்?

பரிதாபத்திற்குரிய அந்த இளைஞன் விக்கி விக்கி அழுதான் இப்போது அவனது அழுகையை தடுத்து நிறுத்த இந்திரன் முயற்சிக்கவில்லை.

இந்திரனும் ஒரு தந்தை என்ற வகையில் குமரன் என்ற அந்த இருபது வயது இளைஞன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்ல அவனால் முடியவில்லை. அமைதியாகக் கிடக்கும் குமரனை இந்திரன் திரும்பிப் பார்த்தார்.

அவன் எதுவும் பேசாமல் கண்களை மூடியவாறு படுத்துக்கிடந்தான். அவனது மூடிய கண்களில் இருந்து கண்ணீர் இரண்டு கன்னங்களிலும் வழிந்து கொண்டிருந்தது.

வெளியிலே சலசலப்பு சத்தம் கேட்டு இந்திரன் கண் விழித்தான். பொழுது நன்றாய் புலர்ந்திருந்தது. குமரன் படுத்துக் கிடந்த இடத்தைப் பார்த்தான். அங்கே அவனை காணவில்லை.


கைகளிலே விலங்குடன் தலையைக் குனிந்தவாறு அந்த இளைஞன் வெளி வாங்கில் இருந்தான். இரண்டு பொலீசார் வந்து அவனை அழைத்துச் சென்றனர்.

பொலிசாருடன் சிறைச்சாலை நோக்கிப் போகும் போது இறுதியாக இந்திரனை அந்த இளைஞன் திரும்பிப் பார்த்தான்.

அந்த இளைஞனின் சோகம் நிறைந்த கண்கள் இந்திரனின் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

ஓ குற்றவாளிகளை உருவாக்கியவர்கள் சுகந்திரமாக நடமாடித் திரிகிறார்கள். ஆனால் அவர்களால் உருவாக்கப்பட்ட குற்றவாளிகளோ தங்கள் எதிர்காலத்தை பற்றிய இன்ப கனவுகளைப் பறி கொடுத்து சிறையிலே கிடந்து வாடுகின்றார்கள்.

குற்றம் செய்தவனை தொடர்ந்து விமர்சிப்பதை விடுத்து எப்போதும் நாங்கள் குற்ற வாளிக்கான காரணங்களைக் கண்டறிந்து குற்றவாளிகளை உருவாக்கும் அந்த காரணங்களை இல்லாமல் செய்ய முயற்சிக்கின்றோமோ அன்று தான் வன்முறை அற்ற ஒரு சமூகம் இந்த மண்ணிலே உருவாகும். ஆம் குற்றவாளிகள் யார் என்பதை இந்திரன் நன்றாகவே புரிந்து கொண்டார்.









# டொனால்ட் டிரம்பின் மனைவியான மெலினியாவின் நிர்வாணப்படங்களை வெளியிட்டது நியூயோர்க் போஸ்ட்


அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சியின் வேட்பாளராக டொனால்ட் டிரம்ப் (வயது 70) சமீபத்தில் அந்தக் கட்சியினால் நியமிக்கப்பட்டார்.

அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஜன நாயகக் கட்சியின் வேட்பாளராக முன்னாள் அமெரிக்க வெளிவிவகார அமைச்சராக இருந்த ஹிலாரி கிளிண்டன் (வயது 68) பில்லா டெல்பியாவில் நடைபெற்ற அந்தக் கட்சி மாநாட்டில் முறைப்படி அறிவிக்கப்பட்டார்.

டொனாட்ல் ட்ரம்ப் இதுவரையில் எந்த அரசியல் பதவிகளும் வகிக்கவில்லை. இவர் றியல் எஸ்டேட் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஒரு தொழிலதிபரும் ஒரு பெரும் கோடீஸ்வரரும் ஆவார்.

சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தெரிவிப்பதிலும், விமர்சனங்கள் செய்வதிலும் இவருக்கு நிகர் இவரே தான்.

நாக்கில் சனி என்று சொல்லுமளவிற்கு இவர் தெரிவிக்கும் கருத்துக்கள் இவருக்கே வினையாக வந்துகொண்டிருக்கின்றது.



இமெரிக்காவிற்குள் முஸ்லிம்கள் முஸ்லிம்களை அனுமதிக்க மாட்டேன் என்றெல்லாம் கருத்துக்களைம் தெரிவித்து வருகின்றார்.

அண்மையில் இவருடன் போட்டியிடும் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான கிலாரி கிளிண்டனை ஓர் னுநஎடை என்று பகிரங்கமாக வர்ணித்தது குறிப்பிடத் தக்கது.

இச்சந்தர்ப்பத்தில் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் டிரம்புக்கு ஆதரவாக அவரது மனைவி மெலினியா டிரம்ப் தற்போது பிரசாரக் களத்தில் குதித்துள்ளார்.

யுகோஸ்லோவாக்கியா நாட்டில் 1970 ஆம் ஆண்டு ஓர் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த மெலினியா (46) மொடலிங் துறைக்குள் நுழைந்து உள்நாட்டில் பிரபலமானார்.

பின்னர், மிலன் மற்றும் பாரிஸ் நகரங்களில் மொடல் அழகியாக வலம் வந்த அவர், அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் 1996 ஆம் ஆண்டு குடியேறினார். 1988 ஆம் ஆண்டு மன்ஹாட்டன் நகரில் நடந்த ஒரு விழாவில் டொனால்ட் டிரம்பைச் சந்தித்த மெலினியா, அவரைக் காதலித்து, மூன்றாவது மனைவியானார்.

இந்நிலையில், அவர் மொடலிங் தொழிலில் கொடிகட்டிப் பறந்தபோது, 1990 ஆம் ஆண்டு பகுதியில் நிர்வாணமாக எடுத்த புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. முழு நிர்வாண கோலத்தில் அவரது பல் வேறு புகைப்படங்களையும், இன்னொரு பெண்ணுடன் கட்டியணைத்தபடி கட்டிலில் படுத்திருக்கும் வேறு சில புகைப்படங்களையும் அமெரிக்காவின் பிரபல நாளிதழான 'தி நியூயோர்க் போஸ்ட்டில்' வெளியிட்டுள்ளது.


தற்போது வெளியீடப்பட்டுள்ள புகைப் படங்கள் நின்றுபோன பழைய பத்திரிகைக்காக அவர் போஸ் கொடுத்தவை மேலும், இந்தப் புகைப்படங்கள் தனக்கு மெலினியா அறிமுகம் ஆவதற்கு முன்னர் எடுக்கப்பட்டவை என்று டொனால்ட் டிரம்ப் கூறியுள்ளார்.


முன்னர் வெகு வெற்றிகரமான மொடலிங்கில் திகழ்ந்த மெலினியா, இது போல் ஏராளமான பத்திரிகைகளின் அட்டைப்படங்களுக்கு 'போஸ்' கொடுத்திருந்தது எனக்கு முன்னரே தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மெலனியா ட்ரம்ப் இவ்வாறு நியூயோர்க் போஸ்ட்டில் வெளிவந்த அவரது நிர்வாணப் படங்களைப் பற்றி அலட்டிக் கொள்ளவேயில்லை. அவர் மாத்திரமல்ல டொனால்ட் ட்ரம்ப்பும் அதனை பெரிய விடயமாக காட்டிக் கொள்ளவுமில்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைவதற்குள் மேலும் பல சர்ச்சைக்குரிய செய்திகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் இரண்டு முக்கிய கட்சிகளில் போட்டியிடும் ட்ரம்ப், கிலாரிக் கிடையில் முக்கியமாக மூன்று விவாதங்கள் நடைபெறும் என்றும் அவைகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது.





# ஆன்மீகம்



## திருநீற்றை உடலில் எங்கெல்லாம் பூசலாம்

சைவ சமய நெறியைப் பின்பற்றுபவர்கள் திருநீறு பூசிக் கொள்கிறோமே தவிர, எங்கெல்லாம் பூசிக் கொள்ள வேண்டும்? எப்படி பூசிக் கொள்ள வேண்டும் என்று தெரியாமலிருக்கிறோம்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"

என்கிறார் திருமூல நாயனார்.

திருநீற்றை வெறுமனே சாம்பல் என்று எண்ணாமல், அது ஒரு மாபெரும் கவசம் என்று நினைவுடன் பயபக்தியுடன் பதினெட்டு இடங்களில் அதற்குரிய வரிசையில் திருநீறு அணிதல் நல்லது எனப்படுகிறது.



சிரசு நடுவில், நெற்றி, மார்பு, தொப்புளுக்கு சற்று மேலே, இடது புஜம், வலது புஜம், இடது கை நடுவில், வலது கை நடுவில், இடது கை மணிக்கட்டு, வலது கை மணிக்கட்டு, இடது இடுப்பு, வலது இடுப்பு, இடது கால் நடுவில், வலது கால் நடுவில், முதுகுக்குக் கீழே, கண்டத்தைச் சுற்றி - கழுத்து முழுவதும் முன்பக்கமும், பின்பக்கமும், இடது காதில் ஒரு பொட்டு, வலது காதில் ஒரு பொட்டு.



## வியந்தேன்! பயந்தேன்!

உலகத்தைச் சுற்றிவிட்டு திரும்பிய நாரதரிடம் பிரம்மா, "உலகில் நீ பார்த்த ஆச்சரியமான விஷயம் ஏதாவது உண்டா?' என்று கேட்டார்.

"உண்டு. எல்லோரும் பாவத்தின் விளைவை எண்ணி பயப்படுகிறார்கள். அப்படி இருந்தும் பாவம் செய்து கொண்டே இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் புண்ணியத்தின் விளைவை கண்டு அதன்மேல் விருப்பம் கொள்கிறார்கள். ஆனால் புண்ணியச் செயல் செய்வதில் தயக்கம் காட்டுகிறார்கள். இதுதான் எனக்கு வியப்பாக இருந்தது!' என்றார் நாரதர்.

## ஆன்மீக கேள்வி – பதில்!!!

**வீட்டில் சிலை வைத்து வழிபாடு செய்யக்கூடாது என்று சிலர் கூறுகின்றனர். அது சரியானதா?**

வீட்டில் சாமி சிலைகளை ஆறு அங்குல உயரத்திற்கு மேல் இல்லாமல் வைத்து தாராளமாக பூஜை செய்யலாம்.

**பிறந்த கிழமையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பது கூடாதா?**

பிறந்த நட்சத்திரத்தில் மட்டுமே எண்ணெய் தேய்த்துக் குளிக்கக் கூடாது. கிழமை பார்க்க வேண்டாம். தீபாவளியன்று ஜென்ம நட்சத்திரம் வந்தால் சும்மா இருந்து விடாதீர்கள். அது விதிவிலக்கு.

**வீடு, தீர்த்தக்கரை, கடற்கரை இம் மூன்றில் பிதுர் தர்ப்பணத்தை எங்கு செய்வது சிறப்பானது?**

கடற்கரையில் செய்வது முதன்மையானது. நதி, குளக்கரைகளில் செய்வது விசேஷமானது. வீட்டில் செய்வது மத்திமம் தான். அவசர கதியில் சென்று கொண்டிருக்கும் வாழ்க்கைச் சூழலில், ஏதாவது ஓரிடத்தில் விட்டுவிடாமல் செய்வதே மிக மிக உத்தமமானது தான்.

**பஞ்சாட்சர மந்திரம் (நமசிவாய, சிவாய நம) சொல்லித்தான் திருநீறு பூச வேண்டும் என்பது உண்மையா?**

பஞ்சாட்சரம் (நமசிவாய) சொல்லி திருநீறும், அஷ்டாக்ஷரம் (ஓம் நமோ நாராயணாய) சொல்லி திருமண்ணும் இட்டுக் கொள்வதைப் போன்ற புண்ணியச் செயல் இவ்வுலகில் வேறு கிடையாது.

**கருவறையில் திரைபோடும் போது சந்நிதியை தரிசனம் செய்வதோ சுற்றி வலம் வருவதோ கூடாது என்கிறார்களே? உண்மைதானா?**

உண்மைதான். ஒருவரை சந்திக்கச் செல்கிறோம். அவர் நம்மை சந்தித்துப்பேசும் நிலையில் விழித்துக் கொண்டிருந்தால் தானே சந்திப்பு என்பது நிகழும். அது போலத் தான் திரைப்போடப்பட்ட சந்நிதியும்! அப்போது தரிசிப்பது வலம் வருவது போன்றவை செய்யக்கூடாது. இது போன்ற சமயங்களில் விமான கோபுரங்கள் உள்ளன. அவற்றை தரிசித்தாலே சுவாமி தரிசன பலம் கிட்டும்.

**கோயில்களில் கொடுத்த பூமாலையை வீட்டில் உள்ள சுவாமி படங்களுக்கு போடுவது சரிதானா?**

ஒருமுறை சுவாமிக்கு சாத்தப்பட்டு பிறகு எடுக்கப்படும் மாலைக்கு "நிர்மால்யம்' என்று பெயர். நிர்மால்ய மாலைகளை வேறு தெய்வத்திற்குச் சாத்துதல் கூடாது.

**பூஜை அறையில் சுவாமி படங்களுடன் மறைந்த பெரியவர்களின் படங்களை வைக்கலாமா?**

சுவாமி படங்களுடன் சேர்த்து வைப்பது கூடாது. சற்று தள்ளி தனியாக வைத்து வழிபடலாம். மறைந்த பெரியவர்கள், பிதுர்கள் என்று அழைக்கப்படுவர். தெய்வ நிலை வேறு. பிதுர்நிலை வேறு.

**அசைவம் சாப்பிடும் நாட்களில் கோயிலுக்கு செல்வது தவறுதானா?**

கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்ய வேண்டும் என்ற உயர்ந்த எண்ணம் கொண்டிருக்கும் நீங்கள் அந்த கருமத்தை விட்டுவிடக்கூடாதா? உலகிலேயே அதிகமாக அசைவம் சாப்பிடும் சீனர்கள் கூட இன்று சைவத்திற்கு மாறி வருகிறார்கள். உலகிற்கே எடுத்துக்காட்டாக இருக்கும் இந்து தர்மம் புலால் சாப்பிடுவதை அனுமதிப்பதில்லை. எனவே இந்தக் கேள்வி தள்ளுபடி செய்யப்படுகிறது.

## திருச்செந்தூர் முருகன் கோயில்

### - ஒரு கட்டிடக்கலை அதிசயம் -

பொதுவாக யாரும் கடற்கரையை ஒட்டி பெரிய கட்டிடங்கள் கட்டுவதில்லை. கடற்கரைப் பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் தரைக்கு மிக அருகில் இருக்குமாதலால் இங்கு கட்டப்படும் கட்டிடங்கள் விரைவில் பலவீனமாகிவிடும். அப்ப டியே கட்டினாலும் தரை மட்டத் திலிருந்தும் கடல் மட்டத்திலிருந்து உயரமான மேடைகளை அமைத்து அதன் மேல்தான் கட்டுவார்கள்.



ஆனால், திருச்செந்தூர் முருகன் கோயில் கடற் கரையிலிருந்து வெறும் 67 மீ தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. 133 அடி உயரமுள்ள இந்த திருக்கோயிலின் ராஜ கோபுரம், கடற்கரையிலிருந்து 140 மீ தொலைவில்தான் அமைந்துள்ளது.

எல்லாவற்றையும் விட பெரிய வியப்பு இந்த கோயிலின் கருவறை. இது தரை மட்டத்திலிருந்து 15 அடியும், கடல் மட்டத்திலிருந்து 10 அடியும் தாழ்வான இடத்தில் கட்டப்பட்டுள்ளது !

திருச்செந்தூர் கோயிலைப் பற்றிய விவரங்கள் தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, திருமுருகாற்றுப்படை சிலப்பதிகாரம் போன்ற சங்ககால இலக்கியங்களில் காணப்படுவதை நாம் கருத்தில்கொண்டால், இந்த கோயில் கட்டப்பட்டு குறைந்தது 3000 ஆண்டுகளுக்கு மேல் இருக்குமென்று நாம் அறிந்து கொள்ளலாம்.

இவ்வளவு ஆபத்தான இடத்தில், கடலுக்கு மிக அருகில் துணிந்து கட்டப்பட்ட இந்த திருக்கோயில் இத்தனை ஆண்டுகளாக எந்தவித பாதிப்புகளுமில்லாமல் கம்பீரமாக நிற்பதை பார்க்கும் போது நமது முன்னோர்களின் கட்டிடக்கலை அறிவும் திறமையும், கடவுள் மேல் அவர்களுக்கிருந்த நம்பிக்கையும் நம்மை வியப்பில் மூழ்கடித்து விடுகிறது!

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## றியோ ஒலிம்பிக்

சில சமயம் இவர் 400 மீற்றர் ஓட்டப்போட்டியிலும் பங்குபற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2009 ஆம் ஆண்டின் உலக சம்பியன் சிப் போட்டியில் தங்கம் வென்ற பிற்பாடு இவர் ஆணா பெண்ணா என்ற பாலியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். அந்த பரிசோதனையை அடுத்து லண்டன் நடைபெற்ற 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் வெள்ளி பதக்கம் வென்றார்.

**காற்றீ லெடக்கி** - Katie ledecky

இவர் அமெரிக்காவை சேர்ந்த நீச்சல் வீராங்கனை. இலண்டனில் நடைபெற்ற 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 800 மீற்றர் நீச்சல் போட்டியில் 2 அவது வேக சாதனையை படைத்தவர் 15 வயதிலேயே இவர் தங்க பதக்கம் வென்றுள்ளார். பங்கு பற்றிய எல்லா போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளார். இது வரை 11 உலக சாதனைகளை கைவசம் வைத்துள்ளார்.

**மிஸ்சி பிறாங்கிலின்** - Missy Fraknlin

இவர் அமெரிக்காவை சேர்ந்த வீராங்கனை. லண்டனில் நடைபெற்ற 2012 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் 4 தங்க பதக்கம் மற்றும் ஒரு வெண்கலப் பதக்கம் வென்றார். 21 வயதுடைய இவர் மீண்டும் நீச்சல் போட்டியில் போட்டி யிட முன்வந்துள்ளார். உலக சம்பியன் சிப் போட்டியில் 6 தங்கப் பதக்கம் வென்றுள்ளார். இவரே நீச்சல் போட்டியில் மிகவும் சிறப்பாகவும் வேகமாகவும் நீந்த கூடியவர்.

**மைக்கல் பெல்ப்ஸ்** - Michiel Phelps

இவர் 5 ஆவது முறையாக ஒலிம்பிக் போட்டியில் போட்டியிட முன்வந்துள்ளார். இவர் இதுவரை 22 பதக்கங்களை வென்றவர். அதில் 18 தங்க பதக்கங்களாகும். 31 வயதான பெல்ப்ஸ் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை அடுத்து விளையாட்டுகளில் இருந்து ஒதுங்கினார். ஆனால் 2 வருடத்திற்கு முன்னர் மீண்டும் நீச்சல் தடாகத்தில் குதித்து பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

**பிறேஸில் உதைபந்தாட்ட வீரர் நெய்மர்** - Neymer

2 வருடத்திற்கு முன்னர் நடைபெற்ற உலக உதைபந்தாட்ட போட்டியில் பிறேஸில் அணியின் சம்பியன்சிப் கனவு திடீர் என முடிவுக்கு வந்தது. அப்பொழுது மைதா னத்தில் கண்ணீர் வடிந்த படி மிகவும் சோகமாக நின்று இருந்தார். இந்த முறை பிறேஸிலில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் பிரேசில் உதைபந்தாட்ட அணி தங்கம் வெல்லும் கனவை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளார்.

## அத்தியாயம் 14

# சந்தர்ப்பவாதிகள்

ஏ.ஜே.ஞானேந்திரன்

அப்பாவிப் பாடசாலை மாணவி வித்யாவை அநியாயமாகக் கொலை செய்த நிகழ்வையும், தலைவெட்டிகள் தேவை என்ற செய்தியையும் மனதுள் இணைத்துப் பார்த்தாள் கார்த்தி. இலங்கையிலும்சட்டங்கள் கடுமையாக்கப்பட்டால், அரபு நாடுகளைப் போல நடுவீதியில் வைத்து தலையைத் துண்டிப்பதோ அல்லது தூக்கிலிடுவதோ இலங்கையிலும் அமுலுக்கு வந்தால், இப்படியான வன்முறைச் சம்பவங்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும் என்று அவர் அந்தக் கணம் நினைத்தார்.

*****

மாற்றம் ஒன்றே மாறாதது. ஏனைய நிகழ்வுகள் எல்லாமே மாறுந் தன்மை கொண்டவை.

நிவேதாவுக்கு யாழ்ப்பாண நிகழ்வுகள் எல்லாமே புதினமாக இருந்தன. அவள் வாழ்வில் பெரும்பகுதி கனடாவிலேயே கழிந்து விட்டதால், தற்போதைய யாழ்ப்பாணத்தைப் பற்றி பத்திரிகைகளில் வாசித்ததை விட, தொலைக்காட்சியில் அறிதாகப் பார்த்தவற்றை விட பெரிதாக யாழ் மண்ணைப் பற்றி எதுவுமே தெரியாது. பதினைந்து வருட காலம் யாழ்ப்பாணத்தை நன்றாக மாற்றியிருக்கும் என்று அவள் திடமாக நம்பினாள்.

நேரில் யாழ்ப்பாணத்தைப் பார்த்தபோது, மாற்றம் ஒன்றே மாறாதது என்ற வரிகளை அவள் நினைத்துக் கொண்டாள். மண் மட்டுமல்ல மனிதர்களும் நிறைய மாறியிருந்தார்கள்.

யுத்தத்தின் வடுக்கள் ஓரளவு மறைந்திருந்தாலும், பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து களைத்துப் போயிருக்கும் மக்களின் சோகம் அவர்கள் முகத்தில் அப்பியிருப்பதை அவளால் காணமுடிந்தது. கண்டி வீதி, கே. கே. எஸ். வீதி போன்ற பெருந்தெருக்கள் கறுப்புக் கம்பளம் விரித்தாற்போல அகன்று விரிந்து செல்ல, வாகனங்கள் அலுங்காமல் குலுங்காமல் பயணிகளை ஏற்றிக் கொண்டு செல்வதைப் பாஉத்து சந்தோஷப்பட்டாள். ஆனால் அதே சமயம் பல ஒழுங்கைகள், வீதிகள் குண்டுங் குழியுமாகக் காட்சியளிப்பதைப் பார்த்தபோது, அரசு அள்ளித் தெறித்த சில சகாயங்களின் எச்சங்கள் இந்தக் கார்பெற் றோட் என்று நினைத்துக் கொண்டாள் நிவேதா..

யாழ்ப்பாணத்து வெயில் அவளைப் பயமுறுத்தியது. வைகாசிக் காற்று வீசுவது ஓரளவு வெப்பத்தைத் தணித்தாலும், வந்த நாளில் இருந்து தினமும் மூன்று தடவைகளாவது குளிக்கும் நிர்ப்பந்தம் அவளுக்கு இருந்தது. இரவில் மின்விசிறி இல்லாமல் தூங்க முடியாது. ஒரு தடவை மின்சார விநியோகம் இரவில் தடைப்பட்டபோது, வியர்வையில் அவள் உடைகள் தெப்பமாக நனைந்து விட்டன. மின்சார விநியோகம் மீள வரும்வரை அவளுக்குச் சிவராத்திரிதான்.

அன்றும் வழக்கம்போல, குளித்து விட்டு தலையைத் துவட்டிக் கொண்டு, ஈரத் துவாயுடன் வீட்டுக் கொல்லைப்புறம் நோக்கி நடந்தாள்.

அம்மா தேசி மரத்திற்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் ஒரு பெரிய பாத்திரத்தில் பிழிந்த தேங்காய்ப்பூ நிரம்ப இருந்தது.

"அம்மா எதுக்கம்மா இந்தத் தேங்காய்ப்பூ?"

அம்மா சிரித்துக் கொண்டே பதில் சொல்லாமல், பால் பிழிந்தெடுக்கப்பட்ட முழுத் தேங்காய்ப்பூவையும் மரத்தடியில் கொட்டினாள்.

மகள் தாயை அதிசயமாகப் பார்த்தாள்.

அவள் அடுத்த கேள்வியைத் தொடுக்க முதல், தாய் பதிலைத் தந்தாள்.


"பால் பிழிஞ்ச பிறகு மிஞ்சிற சக்கைப் பூவை மரத்தடியில போட்டா மரம் நல்லாக் காய்க்குமாம் நிவேதா"

"இந்த விசர்க் கதையை என்னை நம்பச் சொல்றியே அம்மா? இதெல்லாம் வெறும் ஸ்டுப்பிட்நஸ் "

"நீ வெள்ளக்காரி... யாழ்ப்பாணத்து சங்கதிகளை நீயெங்க நம்பப்போறாய்? மரங்களுக்கு நாணமாம். இன்னொண்டு சொன்னா நீ என்னை அடிக்கத்தான் வருவா பிள்ளை. ஒரு பொம்பிளை, உடுப்பில்லாமல் இந்தப் பூவை வீசினா இன்னும் விசேஷமாம்.. மரம் நல்லாக் காய்க்குமாம் "

நிவேதாவால் இந்தத் தடவை சிரிப்பை அடக்க முடியவில்லை. விழுந்து விழுந்து சிரிப்பார்கள் என்பார்களே அதுபோல நன்றாக வாய்விட்டுச் சிரித்தாள்.

ஆங்கிலத்தில் ஏதோ முணுமுணுத்துக் கொண்டு பலத்த சிரிப்போடு அங்கிருந்து நகர்ந்த அவள், கையிலிருந்த ஈரத் துவாயை கொடியில் காயவிடுவதற்கு முனைந்தாள்......



இங்கே நிவேதா அடக்க முடியாத சிரிப்போடு நிற்க, பல்லாயிரக்கணக்கான மைல்கள் உயரத்தில் சத்யன் விமானத்தில் பறந்து கொண்டிருந்தான். ஐபாட்டில் ஒரு நாவலை வாசிக்க முயன்று கொண்டிருந்த அவன் மனம், நாவல் வரிகளில் நிலைப்பதாக இல்லை.

விமானத்தைவிட அவன் மனம் வேகமாகப் பறந்து யாழ்ப்பாணத்திலுள்ள நிவேதாவின் வீட்டுக்குப் போக முயற்சித்துக் கொண்டிருந்தது.

இப்பொழுது நிவேதா என்ன செய்து கொண்டிருப்பாள்? அவன் தன்னைத்தானே அந்தப் பொழுதில் கேட்ட கேள்வி அதுதான். அடடா நான் எப்படி எப்படியெல்லாம் மாறிவிட்டேன் என்று அந்த நேரம் அவன் ஆச்சரியப்படவும் தவறவில்லை.

இன்னும் நேரில் சந்திக்காத ஒரு பெண்ணின் காதல் வலையில் எப்படி விழுந்தேன் என்று ஆச்சரியப்பட்டான். ஸ்கைப்பில் முதற் தடவையாக அவளை நேரில் பார்த்து உரையாடிய பொழுதில், நிவேதா நல்ல அழகி என்று அவன் கண்டுகொண்டான். தன்னுடன் மிகச் சினேகமாக உரையாடிய விதம் அவனுக்கு நன்றாகப் பிடித்திருந்தது.

தன் பழைய சினேகிதம் பற்றி மேலும் பல தகவல்களை திறந்த மனதோடு அவள் தன்னுடன் பகிர்ந்து கொண்டது அவனுக்குப் பிடித்திருந்தது.

உங்களுக்கு எவராவது சினேகிதிகள் இருந்தார்களா இருக்கிறார்களா என்று அவள் சிரித்தபடி கேட்டபோது, அவன் நிறைய என்று அதே சிரிப்போடு பதில் கொடுத்தான்.

நிறைய என்றால் எத்தனை என்று அவள் திருப்பிக் கேட்க, எண்ண முடியாத அளவு என்று உற்சாகத்தோடும் சிரிப்போடும் தான் பதில் அளித்தது அவன் ஞாபகத்திற்கு வந்தது.

ஐயோ எனக்குப் பெண்கள் என்றால் அலர்ஜி. என்னுடன் படித்த பெண்களுக்குப் பிறகு நான் சகஜமாக உரையாடும் முதல் பெண் நீங்கள்தான் என்று அந்த நேரம் சொல்லியிருந்த சத்யன், பல விடயங்களை மனம் விட்டுப் பகிர்ந்தது ஞாபகத்திற்கு வந்தது.

உணவு வண்டியைத் தள்ளிக்கொண்டு எயர்ஹொஸ்டஸ் அவன் சீட்டருகே வந்து மதிய உணவுத் தட்டை நீட்டியபோது, அவன் சிந்தனை தடைப்பட்டது. நன்றி சொல்லிவிட்டு, உணவை ருசிக்க ஆரம்பித்தான்.

வரும்போது எமிரேட்ஸ் எயர்லைன் மூலம் பயணித்தவன். இந்தத் தடவை துருக்கி எயர்லைன் மூலம் பயணத்தை மேற்கொண்டிருந்தான். துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லில் தரித்து ஆறு மணி நேரங்கள் நின்றபின்பு, அங்கிருந்து கொழும்புக்கான விமான பயணத்திற்கு வேறொரு விமானத்திற்காக காத்திருக்க வேண்டியிருந்தது.

இந்த ஆறு மணி நேரக் காத்திருப்பின் போது, இரவு உணவை விமான நிலையத்தில் இலவசமாக வழங்கினார்கள். கையிலுள்ள விமானச் சீட்டை அதிகாரிகளிடம் சமர்ப்பித்தால், அவர்கள் ஒரு கூப்பனைத் தருவார்கள். அங்குள்ள உணவகமொன்றில் இதைக் காண்பித்து, உணவைப் பெற்றுக் கொள்ளலாம்.

விமானத்திற்குள் உணவு வழங்கிய போது, இவனுக்கு அந்த நிகழ்வு ஞாபகத்திற்கு வந்தது. இரண்டு விமானப் பயணத்திற்கு வழங்கப்படும் நாலாவது உணவு இது. மதுபானமும் தாராளமாகத் தரப்படுகின்றது.

வித்தியாசமான சேவைதான் என்று அவன் நினைத்துக் கொண்டான். இது அவனுக்கு இரண்டாவது விமானப் பயணம். ஒருவேளை தனக்கும் நிவேதாவுக்கும் திருமணம் நடந்தால், மீண்டும் விமானப் பயணத்திற்கான வாய்ப்பு வரப் போகின்றது என்று நினைவு அவனுள் ஒரு கணம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

அதே சமயம் தனக்கும் நிவேதாவுக்கும் திருமணம் என்பதை எப்படி நான் இப்பொழுது உறுதியாகச் சொல்வது என்றும் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். எதுவுமே உறுதியில்லாத நிலையில், எப்படி ஒன்றை நான் இன்று நிச்சயப்படுத்த முடியும் என்று சத்யன் தன்னைத்தானே அந்தக் கணம் கேட்டுக் கொள்ளத் தவற வில்லை.

திடீரென விமானம் ஆட்டங் கண்டது. பயணிகள் இடுப்புப் பட்டிகளை அணிந்து கொள்ளுங்கள் என்ற அறிவிப்புத் தொடர்ந்தது. நடை பழகிக் கொண்டிருந்த பயணிகள் அவரவர் ஆசனங்களில் அமரப் பணிக்கப்பட்டார்கள். விமானப் பணிப் பெண்களும் தமது இருக்கைகளில் அமர்ந்து அவசரம் அவசரமாக இடுப்புப் பட்டிகளை இறுகக் கட்டிக் கொண்டார்கள்.

சிறகு ஒடிந்த பறவை போல விமானம் அங்கும் இங்குமாகத் தள்ளாடியது.

(தொடரும் ...)

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கோபாலு என்கிற....

இரண்டு கைகளாலும் அடிபட்ட இடத்தைப் பொத்திக் கொண்டு ஓட்டம் எடுத்தான் கோபாலு. குண்களை முட்டிக்கொண்ட கண்ணீர் எட்டிப் பார்த்தது.

எல்லா மாணவர்களும் கண்களை மூடி பக்தி கீதம் இசைத்தனர் .கோபாலு மட்டும் " கடவுளே என்ரை பேனையை எப்படி நான் வாங்கிறது" என்று எண்ணிக் கொண்டான்.

அங்கும் இங்குமாக கண்களை விட்டு ஜமுனா ரீச்சரைத் தேடினான். தேவாரம் முடிஞ்ச கையோடை ஜமுனா ரீச்சரடிக்கு ஓடோடி வந்தான் கோபாலு.

" ரீச்சர் என்ரை பேனை..." தயக்கத்தோடு நிமிந்து பார்த்தான் .

" நான் அப்போதை தரேல்லையே? சைன் பண்ணியிட்டு மறந்து போய் அந்த இடத்திலையே விட்டிட்டன் போலை இருக்கு. அதிலை இருந்தா எடுத்துத்தாறன் "

ரீச்சர் நைசா நழுவினா .

முதல் பாடம் சமயம்.

"மயூரன் என்ன அங்கை கோபாலகிருஷ்ணனோடை கதை? விடிய வந்த உடனையே ஞாயம் பிளக்கத் தொடங்கியாச்சோ?" இடியோசை போல் வெளிவந்தன வாத்தியாரின் வார்த்தைகள்.




"அது சேர் கோபால கிருஷ்ணனிட்டை பேனை இல்லையாம் . ரண்டு பேனை இருந்தா ஒண்டு தரச்சொல்லி கேட்டவர் "


தயங்கி நின்றான் மயூரன் " எழும்படா கோபாலகிருஷ்ணன் நேற்று உனக்கு சொல்லி விட்டனான். உங்களுக்கு படிப்புச் சரிவராதெண்டா வீட்டை நிண்டு கொம்மா கொப்பாவைக்கு ஒத்தாசையாவது பண்ணுங்கோவன். இஞ்சை வந்து அநியாயத்துக்கு எங்களைக் கத்த வைக்கிறியள் . ஓடு அதிபரிட்டை வாய் பாக்கவோ வாறியள். பேனை இல்லாட்டி இந்தப் பக்கம் வரப்பிடாது. " அதிபரின் பிரம்பு பதம் இடத்தில் மீண்டும் பிரம்படிகள். ஓடினான் கோபாலு.

"கோபாலு ஏன் ஐயா பள்ளிக்கூடத்துக்குப் போனகையோடை திரும்பிட்டாய்? ஏதன் கர்த்தால் கடையடைப்போ?"



"ஒண்டும் இல்லையணை. நான் இனி மேல் பள்ளிக்கூடம் போகமாட்டன் "

# விளையாட்டு





## ரியோவில் அகதிகள் அணி !

## அசத்தப்போகும் 10 பேர்

பிரேசிலின் ரியோடி ஜெனீரோவில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் 10 பேர் கொண்ட அகதிகள் அணி, ஒலிம்பிக் சம்மேளனத்தின் கொடியின் கீழ் பங்கேற்கவுள்ளது. இந்த அணிக்கு அகதிகள் ஒலிம்பிக் அணி என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆவர். இந்த பத்து பேரும் ஒரே அணியாக ஒலிம்பிக் தொடக்க நாளின்போது சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனத்தின் கொடியை ஏந்தி அணி வகுத்து வரவுள்ளனர். நான்கு நாடுகளைச் சேர்ந்த இந்த வீரர்கள், வீராங்கனை குறித்த விவரத்தை கடந்த ஜூன் மாதம் சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி அறிவித்தது. இவர்களது சாதனைக் கனவை நனவாக்க இவர்களுக்கு போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பையும் ஒலிம்பிக் கமிட்டி கொடுத்துள்ளது. இதுகுறித்து ஒலிம்பிக் கமிட்டியின் தலைவரான தோமஸ் பேக் கூறுகையில், இவர்கள் அகதிகள். இவர்களுக்கென்று நாடு இல்லை, அணி இல்லை, கொடி இல்லை, தேசிய கீதம் இல்லை. ஒலிம்பிக் கிராமத்தில் இவர்கள் பத்து பேருக்கும் இடம் தரப்பட்டுள்ளது. உலகின் இதர வீரர்கள், வீராங்கனைகளுடன் இவர்களும் சமமாக கலந்துள்ளனர். இவர்கள் ஒலிம்பிக் கொடியை ஏந்தி அணிவகுத்து வருவர். இவர்களுக்காக ஒலிம்பிக் கீதம் இசைக்கப்படும். இப்படி ஒரு அணி பங்கேற்பது இதுவே முதல் முறையாகும் என்பதால் இவர்கள் வரலாறு படைக்கவுள்ளனர் என்றார் பேக்.

யுஸ்ரா மார்டினி

சிரியாவைச் சேர்ந்த யுஸ்ரா மார்டினி நீச்சல் வீராங்கனை ஆவார். இவர் ஜெர்மனியில் தற்போது அகதியாக புகலிடம் பெற்றுள்ளார். 18 வயதாகும் யுஸ்ரா, கடந்த 2015ம் ஆண்டு சிரியாவை விட்டு இடம் பெயர்ந்து வந்தவர் ஆவார்.

ரமி அனிஸ்

சிரியாவைச் சேர்ந்தவர். நீச்சல் வீரர். பெல்ஜியத்தில் வசித்து வருகிறார். 25 வயதாகும் இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு தனது 20 ஆவது வயதில் குடும்பத்துடன் சிரியாவை விட்டு இடம் பெயர்ந்தவர்.

யோனஸ் கிண்டே

எத்தியோப்பியாவைச் சேர்ந்த யோனஸ் கன்டே தடகள வீரர். அதாவது மரதன் போட்டியில் பங்கேற்கிறார். 36 வயதான இவர் லக்சம்பேர்க்கில் வசித்து வருகிறார். நான் உயிருடன் இருக்கிறேன். அதுவே எனக்கு மகிழ்ச்சியானது. இப்போது ஒலிம்பிக்கில் பங்கேற்கிறேன். அது மேலும் மகிழ்ச்சி தருகிறது என்று கூறியுள்ளார் யோனஸ்.

யீச் பு பியல்

தெற்கு சூடானைச் சேர்ந்த 21 வயதான யீச் புர் பியல், தடகள வீரர். 800 மீட்டர் ஓட்டப் போட்டியில் கலந்து கொள்கிறார். கென்யாவில் புகலிடம் பெற்றவர் இவர்.

ஜேம்ஸ் நியாங் சியன்ஜியக்

தெற்கு சூடானைச் சேர்ந்தவர் 400 மீட்டர் ஓட்டத்தில் பங்கேற்கிறார். கென்யாவிலம் தஞ்சமடைந்து வசித்து வருகிறார்.

ஏஞ்சலினா நடாய் லோஹலித்

இவரும் தெற்கு சூடானைச் சேர்ந்தவர். 1500 மீட்டர் ஓட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ளார். தெற்கு சூடானை விட்டு வெளியேறி கென்யாவில் வசித்து வருகிறார்.

போபோல் மிசங்கா

24 வயதான போபோல், காங்கோ நாட்டைச் சேர்ந்தவர். ஜூடோவில் 90 கிலோ எடைப் பிரிவில் இவர் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்கிறார்.

யோலண்டே புகாசா மபிகா

24 வயதான போபோல், காங்கோ நாட்டைச் சேர்ந்தவர். ஜூடோவில் 90 கிலோ எடைப் பிரிவில் இவர் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்கிறார்.

லோக் நதிகே லோகோன்யென்


24 வயதான போபோல், காங்கோ நாட்டைச் சேர்ந்தவர். ஜூடோவில் 90 கிலோ எடைப் பிரிவில் இவர் ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்கிறார்.


10 போல் லொகோரோ

தென் சூடானில் வாழ முடியாது புலம் பெயர்ந்து கென்யாவில் வாழும் இவர் 1 500 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் தனது திறமையைக் காட்ட காத்திருக்கிறார்.



தினச்செய்தி
என்றும் உங்களுடன்





# நல்லூர் கந்தன் பெருவிழா

நல்லூர் கந்தனின் வருடாந்த திருவிழா உற்சவம் ஒவ்வொரு வருடமும் ஆடி அமாவாசை தினத்திலிருந்து ஆறாம் நாள் (08.08.2016) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, ஆவணி அமாவாசை தினத்தன்று (25.08.2016) தீர்த்த உற்சவத்துடன் நிறைவு பெறுகிறது.

நல்லூர் கந்தசாமி கோவில் 25 நாள் திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

கொடியேற்றம் காலை 10 மணிக்கு நடைபெறும். அதை தொடர்ந்து வரும் பத்து நாள் திருவிழா வரை எதையும் குறிப்பிட முடியாது.

10 ஆம் நாள் - மஞ்சம், புதன் கிழமை 17.08.2016 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

16 ஆம் நாள் - அருணகிரிநாதர் திருவிழா, செவ்வாய்க் கிழமை 23.08.2016 மாலை 7 மணிக்கு நடைபெறும்.

17 ஆம் நாள் - கார்த்திகை திருவிழா புதன்கிழமை 24.08. 2016 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

19 ஆம் நாள் - சூரியோற்சவம், வெள்ளிக்கிழமை 26.08. 2016 காலை 7 மணிக்கு நடைபெறும்.

20 ஆம் நாள் - திருவிழா சந்தானகோபாலர் கைலாசவாகனம் சனிக்கிழமை 27.08.2016 காலை 7 மணிக்கும், மாலை 5 மணிக்கும் நடைபெறும்.

21 ஆம் நாள் - வேல் விமானத்தில் கயாவல்லி, மகாவல்லி திருவிழா ஞாயிற்றுக்கிழமை 28.08.2016 காலை 7 மணிக்கும், மாலை 5 மணிக்கும் நடைபெறும்.

22 ஆம் நாள் - தண்டாயுதபாணி ஒரு முக திருவிழா திங்கட்கிழமை 29.08.2016 காலை 7 மணிக்கும் மாலை 5மணிக்கும் நடைபெறும்.

23 ஆம் நாள் - சப்பறத் திருவிழா செவ்வாய்க்கிழமை 30.08.2016 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

24 ஆம் நாள் - தேர்த் திருவிழா புதன் கிழமை 31.08.2016 காலை 7மணிக்கு நடைபெறும்.

25 ஆம் நாள் - தீர்த்தத் திருவிழா வியாழக் கிழமை 01.09.2016 காலை 7 மணிக்கு நடைபெறும்.

26 ஆம் நாள் - பூங்காவனம் வெள்ளிக்கிழமை 02.09.2016 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

27 ஆவது நாள் அன்று 3.09.2016 சனிக் கிழமை வைரவர் பூசை நடைபெறும்.













இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஓகஸ்ட் 06, 2016 அன்று வெளியிடப்பட்டது.